Registered as a news paper.

பக்கங்கள் பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET
BROWSING CENTRE
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை.
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna. T.P. 021-2222670, 2223588
Fax - 2223214, Email-del - smskr@eureka.lk

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 வைகாசி 13 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.அவ்வல் 24 (27.05.2003) செவ்வாய்க்கிழமை இதழ்: 235

# நிதியை கையாள இடைக்கால அமைப்பு; அரசியலமைப்புக்குள் புதிய யோசனை!

## அரசின் திட்டத்துடன் சொல்ஹெய்ம் இன்று வன்னிக்கு!

(கொழும்பு)

**வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவிருக்கின்ற அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளின்போது நிதி விவகாரங்களைக் கையாளக்கூடிய இடைக்கால அமைப்பு (Mechanism For Development Of The North & East) ஒன்றினை உருவாக்குவது தொடர்பாக அரசு ஆலோசித்து வருகின்றது. அரசின் இந்த ஆலோசனைகளுடன் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்கின்றார்.**



நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் - நேற்று, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இவ்விடயம் தொடர்பாக கலந்தாலோசனை நடத்தினார். இச்சந்திப்பின்போது, மேற்படி வட - கிழக்கு அபிவிருத்தி பொறிமுறை' என்ற அமைப்பை உருவாக்குவது தொடர்பாக ஆராய்ந்து, அரசதரப்பில் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

அரசதரப்பின் இந்த ஆலோசனை தொடர்பாக, இன்று விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கலந்தாலோசனை செய்வதற்கும், இவ்விடயம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அறிந்துகொள்வதற்குமாக - இன்று காலை நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகத்தினை வலியுறுத்தி சம்பந்தன் கடிதம்

வடக்கு - கிழக்குப் பகுதியில் இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்துவதை மீண்டும் வலியுறுத்தி, தமிழர் கூட்டமைப்பின் செயலாளர் இரா. சம்பந்தன் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதம் பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் கருத்துத் தெரிவிக்கையில்,

இன்றைக்கு வடக்கு - கிழக்குப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பங்கள், துயரங்களை ஈடுசெய்வதாக இருந்தால், நிச்சயமாக ஓர் அதிகாரம் வாய்ந்த ஒரு அமைப்பு, கருமத்தை முழுமையாகக் கையாளக்கூடியவாறு ஏற்படுத்தப்படவேண்டும் என்பது அத்தியாவசியமென்பதைக் கடிதத்தில் வலியுறுத்தி இருக்கிறேன்.

இடைக்கால நிர்வாகம் என்பது புதிய விடயமல்ல. 1987 ஆம் ஆண்டு இந்தியா - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலம் தொடக்கம், இந்த இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாகவும், அதில் புலிகளுக்குப் போதியளவு பெரும்பான்மை இருக்கவேண்டும் என்றும் கருத்து இருந்தது என்பதை எனது கடிதத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறேன் என்றார்.

## இலங்கை நிலைமையை விவாதிக்க நோர்வேப் பிரதமர் ஜப்பான் விரைவு?

இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து கலந்தாலோசனை மேற்கொள்ளும் பொருட்டு, நோர்வேப் பிரதமர் பொன்டவிக், ஜப்பானுக்கு நேற்று பயணமானதாக கொழும்புத் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

நோர்வேப் பிரதமர், ஜப்பானியப் பிரதமர் ஜுனிசிரோ கொசூமியுடன் இலங்கை விடயங்கள் குறித்து விரிவாக ஆராய்வார் என அத்தகவல் தெரிவிக்கின்றது.

இலங்கை அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையே தேக்கமடைந்துள்ள சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பித்தல், ரோக்கியோ நிதி மாநாட்டில் விடுதலைப் புலிகளையும் பங்கேற்கச்செய்தல் போன்ற விடயங்களை இரு பிரதமர்களும் ஆராய்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் - இதனை, நோர்வேத் தரப்பு ஊர்ஜிதப்படுத்தவில்லை.

## இடைக்கால நிர்வாகம்; ஜே.வி.பி.கடும் எதிர்ப்பு!

### அரசு நிலையைத் தெளிவுபடுத்த வேண்டுமாம்

விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாகம் ஒன்றை வழங்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு, ஜே.வி.பி. கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அரசாங்கம் தனது நிலைப்பாட்டை விளக்க வேண்டும் என்று, ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பைப் பாதுகாப்பதற்காக ஜனாதிபதியால் மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைகளுக்கும் ஜே.வி.பி. நிபந்தனையின்றி ஒத்துழைப்பு வழங்கும் என்று, அவர் நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

பிரிவினை வாதத்தைக் கைவிடுவதாக இதுவரை உறுதியளிக்காத விடுதலைப் புலிகளுக்கு, சகல நிர்வாக அதிகாரங்களும் கொண்ட நிர்வாக அலகு ஒன்றை வழங்குவது, நாட்டைப் பிரிப்பதற்குச் சமமாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

எனவே, இந்த விடயத்தில் அரசாங்கம் கொண்டுள்ள நிலைப்பாட்டை விளக்குமாறு, அரசாங் (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கோரிக்கை குறித்து

ஒத்துழைப்பு வழங்கும் என்று, அவர் நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

எனவே, இந்த விடயத்தில் அரசாங்கம் கொண்டுள்ள நிலைப்பாட்டை விளக்குமாறு, அரசாங்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் கோரிக்கை குறித்து பிரதமருக்கு பீற்றர்ஸன் கடிதம்

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகசபைக் கோரிக்கை தொடர்பாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு - நோர்வே வெளிவிவகார அமைச்சர் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் கோரிக்கையான இடைக்கால நிர்வாகசபைக் கட்டமைப்பு குறித்து - தாங்கள் கூடிய கவனம் செலுத்தி வருவதாக - நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் பிரதமருக்கான கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அரசாங்கமும், புலிகளும் - இதற்கான தீர்வைப்பெறும்வரை உதவி வழங்க நோர்வே தயாராக உள்ளது. மேலும் - இலங்கை அரசுக்கும, விடுதலைப் புலிகளுக்கும் இடையில், இவ்விடயம் குறித்த பேச்சுவார்த்தையில் தொடர்பாளராகச் செயற்படத் தாம் தயார் என்றும் பீற்றர்ஸன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நோர்வே சென்றுள்ள அமைச்சர் ஹக்கீம் - அமைச்சர் பீற்றர்ஸனைச் சந்தித்துப் பேசியுள்ளார். இடைக்கால நிர்வாகம் ஒன்று அமைக்கப்படுமானால், அதில் முஸ்லிம்களின் பங்குபற்றி ஹக்கீம் பேசியதாகத் தெரிகிறது.

## கருத்துக்கூற சொல்ஹேய்ம் மறுப்பு

பிரதமரின் கடிதத்துடன் இன்று கிளிநொச்சி செல்லும் நோர்வேத் தூதுவர் சொல்ஹெய்ம், இவ்விவகாரம் குறித்து மேலதிக தகவல்களைத் தர மறுத்துவிட்டார்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான வேறுபாட்டைக் களைய, நோர்வே இடைவிடாது செயற்படுகிறது. இது குறித்துக் கருத்துக்கூற முடியாது. ஆனால், நடவடிக்கைகள் தொடர்ந்தவண்ணமுள்ளன என எரிக சொல்ஹெய்ம் நேற்றுத் தெரிவித்தார்.

# பொயாகொடவுக்கு எதிரான அறிக்கை தளபதியிடம்!

கடற்படைக் கப்டன் அஜித் பொயாகொடவுக்கு எதிரான விசாரணை அறிக்கை, கடற்படைத் தளபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கப்டன் அஜித் பொயாகொட, 'சாகரவர்த்தன' கப்பலின் ஆணையிடும் அதிகாரியாக இருந்தபோது, விடுதலைப் புலிகள் கப்பலைத் தாக்குவதற்கு முயற்சிக்கின்றார்கள் என்று தகவல் கிடைத்தபோதும், 36 மணித்தியாலங்களாகக் கப்பலை ஒரே இடத்தில் நங்கூரமிட்டிருந்தது பற்றியதான விசாரணை அறிக்கையே கடற்படைத்தளபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவர், விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டு, 9 வருடங்கள் காவலில் இருந்து, கடந்த வருடம் விடுதலை செய்யப்பட்டார். விடுவிக்கப்பட்ட காலந்தொட்டு அவர் மீண்டும் கடற்படையில் தொடர்ந்து கடமையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

### யாழ்.நகரில் நள்ளிரவில் அட்டகாசம்

# காவலாளியை போத்தலால் தாக்கிய இளைஞர் குழு!

யாழ்.நகரிலுள்ள கடையொன்றில் இரவுக் கடமைக்கு நின்ற, பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை, மதுபோதையில் வந்த மூவர் போத்தல் ஒன்றினால் தலையில் தாக்கியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில், செம்மணி வீதி - கல்வியங்காட்டைச் சேர்ந்த கந்தையா மகேஸ்வரன் (வயது 62) எனும் பாதுகாப்பு உத்தியோகத்தர் படுகாயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது:-

சம்பவம் இடம்பெற்ற தினம் காவற்கடமையில் நின்ற மேற்படி நபரை, சைக்கிள்களில் - மதுபோதையில் வந்த, மூன்று இளைஞர்கள் சாப்பாடு இருந்தால் தரும்படி கேட்டுள்ளனர். வயது முதிர்ந்த பாதுகாப்பு உத்தியோகத்தர், சாப்பாடு இல்லை எனக்கூறவே, போத்தல் ஒன்றினை மேற்படி நபரது தலையில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

**விண்ணாணம் விநாசியர்**



**அரசியலமைப்புக்குள்ள எண்டால், பழைய குருடி கதவைத் திறவடி கதையோ...?**

EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290

(சி -913)

# மெய்வல்லுநர்களை உருவாக்க

# அரசு விசேட போஷாக்குத் திட்டம்

## விளையாட்டுத்துறை அமைச்சு நடவடிக்கை

இளம் மெய்வல்லுநாகளை உருவாக்கும் நோக்குடன் போஷாக்குத் திட்டமொன்றை, இளைஞா விவகார விளையாட்டுத்துறை அமைச்சு ஆரம்பித்துள்ளது. இதற்காக, 38 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போஷாக்குத் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதிக்குரிய காசோலையை, விளையாட்டுப் பணிபபாளர் மில்டன் அமரசிங்கவிடம் விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கையளித்துள்ளார்.

நாடு முழுவதிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட 511 இளம் வீரர், வீராங்கனைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் விசேட பயிற்சிகளைப் பெற்றுக் கொடுக்கவும் விளையாட்டுத்துறை அமைச்சு திட்டமிட்டுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு இந்தத் திட்டத்தின்கீழ் மாதாந்தம் 500 ரூபா உதவித் தொகை வழங்கப்படவுள்ளது. அத்துடன், சகல மாவட்டங்களிலும் - 187 விளையாட்டுத்துறைப் பயிற்சியாளர்களை நியமித்து, அவர்களுக்கு 3000 ரூபா கொடுப்பனவு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுசந்திகா, தமயந்தி தர்ஷா, சுகத் திலகரட்ண போன்ற சிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளை உருவாக்குவதே இந்தப் போஷாக்குத் திட்டத்தின் நோக்கம் என்று தெரிவித்த விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ - ஆசியாவிலேயே மிகச் சிறந்த மெய்வல்லுநர்களான வீரர், வீராங்கனைகள் இலங்கையிலேயே இருப்பதாகவும் குறிப்பிட்டார்.



நாட்டுப்பற்றாளர் வீ.ரி.ஏ. விஸ்வாவின் நினைவாக, புலிகளின் குரல் நிறுவனம் வெளியிட்ட சீ.டியை, பேராசிரியர் சண்முகதாஸ் வெளியிட அமரரின் மனைவி பெற்றுக்கொள்கிறார்.

# உள்ளூராட்சி வாரத்தையொட்டி போட்டிகள் நடத்துவதற்கு ஏற்பாடு!

எதிர்வரும் ஜூலை மாதம் 14 ஆம் திகதி முதல், ஜூலை 20 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள உள்ளூராட்சி வாரத்தையொட்டி, நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்தின் அனுசரணையுடன் - முன்பள்ளிகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டி, சனசமூக நிலையங்களின் செயற்திறன் போட்டி, தாச்சிப்போட்டி, பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பொது அறிவுப் போட்டி, கட்டுரைப் போட்டி என்பன நடத்தப்படவுள்ளன.

இதற்கான முன்னோடி ஒழுங்குகளை நல்லூர் பிரதேசசபை மேற்கொண்டுள்ளது. (100)

# காப்புறுதி நிறுவனங்களின் வருமானத்தில் வீழ்ச்சி!

(கொழும்பு)

இலங்கையின் காப்புறுதித்துறை மேலும் விஸ்தரிக்கப்பட்டிருப்பதாக, மத்திய வங்கியின் 2003 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில், தற்போது பதினொரு காப்புறுதி நிறுவனங்கள் உள்நாட்டுக் காப்புறுதிச் சேவையில் ஈடுபட்டுவருகின்றன. இவற்றுக்கு நாடு முழுவதும் 463 கிளைகள் இருக்கின்றன.

இந்தக் காப்புறுதி நிறுவனங்களின் மொத்தச் சொத்துப் பெறுமதி 42 மில்லியன் ரூபா எனவும், மத்திய வங்கியின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனினும், கடந்த வருடம் காப்புறுதி நிறுவனங்களின் வருமானம், 1.4 பில்லியன் ரூபாவினால் வீழ்ச்சியடைந்திருப்பதாகவும் மத்தியவங்கி தெரிவித்துள்ளது.

### வாகனங்கள் திருப்பியனுப்பப்பட்டன!

வன்னிப் பிரதேசத்தில் இருந்து வரும் மோட்டார் சைக்கிள்கள்- காப்புறுதி, வரிப் பத்திரங்களுடன் வந்தால மட்டுமே குடாநாட்டினுள் உட்செல்வதற்கு அனுமதிக்கப்படும் என, முகமாலைச் சோதனைச் சாவடியில் படையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பத்திரங்கள் இல்லாமல் வந்த நூற்றுக்கணக்கான மோட்டார் சைக்கிள்கள், கடந்த சில நாட்களாக குடாநாட்டினுள் செல்வதற்கு அனுமதிக்கப்படாமல், முகமாலையில் வைத்துப் படையினரால் திருப்பி அனுப்பப்பட்டன. (122)

# இலவச கண்பரிசோதனை முகாம் அடுத்த வாரம் மீசாலையில்!

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க ஆதரவில், வடஇலங்கை சர்வவோதய அறங்காவலர் திருநாவுக்கரசுவின் இரண்டாம் ஆண்டு நினைவினை முன்னிட்டு, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தென்மராட்சி மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில், இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெறவுள்ளது.

மீசாலை வடக்கு கிராம உத்தியோகத்தர் கே.சுந்தரராசா .தலைமையில், காலை 8.30 மணியளவில் ஆரம்பிக்கும் இம் மருத்துவ பரிசோதனை முகாமில், கண்பார்வை குறைந்தோருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுளளதாகத் தெரியவருகின்றது. (36)

# மருதங்கேணி வைத்தியசாலை மீண்டும் விரைவில் இயங்கும்!

(ஆழியவளை)

தற்காலிகமாக மூடப்பட்டுள்ள மருதங்கேணி வைத்தியசாலை விரைவில் இயங்கவுள்ளதாக சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வைத்தியசாலை தனியார் கட்டடமொன்றில் தற்காலிகமாக இயங்கும் பொருட்டு, முன்னர் இங்கு கடமை புரிந்த வைத்தியரை மீண்டும் இவ்வைத்தியசாலைக்கு மாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இங்கு முன்னர் கடமையாற்றிய ஏனைய ஊழியர்கள் அனைவரும், ஏற்கனவே இவ்வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டு - வைத்தியசாலை இயங்காத நிலையிலும் கடமை புரிந்துவருகின்றனர்.

இதேவேளை, பருத்தித்துறை சுகாதார வைத்தியப் பிரிவினரால் நடத்தப்பட்டுவந்த, நடமாடும் சேவை நிறுத்தப்பட்டுள்ளதால், இப்பகுதி மக்கள் மிகவும் கஷ்டப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (122)

### முஸ்லிம் குடும்பங்கள் உப்புக்குளத்தில் மீள்குடியமர்வு

மன்னார் - உப்புக்குளம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து சென்ற 19 முஸ்லிம் குடும்பங்கள், நேற்றைய தினம் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியமர்ந்தனர்.

1989 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், உப்புக்குளம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து சென்று கற்பிட்டிப் பகுதியில் வசித்துவந்த மக்களே, தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

மன்னார் பிரதேச செயலர் ஆர். வதிரீஸ்வரன் - இக்குடும்பங்களை குடியமர்த்துவதற்கான தற்காலிக கொட்டைகளை ஏற்பாடுசெய்தார்.

# கிழக்கு காணிப் பிரச்சினை; முஸ்லிம்கள் - புலிகள் சந்திப்பு!

(மட்டக்களப்பு)

முஸ்லிம்களின் காணிப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் மட்டக்களப்பு மாவட்ட உபகுழுவின் கூட்டம், நாளை மறுதினம் காலை 10 மணிக்கு வவுணதீவுப் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில், புலிகள் தரப்புப் பிரதிநிதிகள் குழுவுக்கு மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி ரமேஸும், முஸ்லிம் பிரதிநிதிகள் தரப்புக் குழுவுக்கு வீடமைப்புப் பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவூத்தும் தலைமை வகிப்பர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.


திரைஞ்சனாஸ் சங்கானை
ரஜனி, ரம்பா, சௌந்தர்யா
அருணாசலம்
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு (இரவு 8.45)
CASTAWAY
(சி.882)

ராஜா யாழ்ப்பாணம்.
3 வது வாரம்
இளைய தளபதி விஜய், மீராஜஸ்மின், கருணாஸ்
புதிய கீதை
தினசரி 10.30, 2.30, 6.30
சனி, ஞாயிறு 10.30, 2.30, 6.30, 9.30
(சி.883)

இலங்கை வங்கி அறிவித்தல்

இதுவரை காலமும் கொழும்பில் இயங்கிவந்த
இலங்கை வங்கியின்
வட மாகாணக் காரியாலயம்

வாடிக்கையாளர் சேவைகளைத் துரிதப்படுத்தும் மற்றும் விரிவாக்கும் நோக்கில் 28.05.2003 புதன்கிழமை முதல் யாழ் நகரிலேயே இயங்கும் என மகிழ்ச்சியோடு அறியத்தருகின்றோம்.

இக் காரியாலயத்தை எமது பொது முகாமையாளர்
திரு.எஸ்.என்.பளிஹேன
அவர்கள் சம்பிரதாயபூர்வமாக அத்தினத்தில் காலை 9.30 மணிக்குத் திறந்து வைப்பார்கள்.
இந் நிகழ்வில் கிளைகளுக்கும் அபிவிருத்தி வங்கியியலுக்கும் பொறுப்பான
பிரதிப் பொது முகாமையாளர்
திரு.B.A.C.பெர்னான்டோ
அவர்களும் கலந்து சிறப்பிப்பார்கள்.

தேசத்தின் வங்கியாளர்
இலங்கை வங்கி
(சி-957)
உதவிப் பொது முகாமையாளர்.
(வடமாகாணம்)
யாழ்ப்பாணம்.


## இருபத்தைந்தாவது பிறந்தநாளில் நீங்காத நினைவுடன்

### வீரவேங்கை மன்னன்

(லோகநாதன் கோகுலன்/கவாஸ்கர்)

(யாழ். பரியோவான் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்)

தாயின் மடியில் 27 - 05 - 1978



தாயக மண்ணில் 14 - 07 - 1995

சுற்றும் முற்றும் அனைத்தும் வியக்க
அன்புடனே சுற்றி வந்தாய்
நேசங்கொண்ட நெஞ்சங்களில்
நிலைபெறவே வாழ்ந்து வந்தாய் - அது
உற்றார், சுற்றார் நெஞ்சமெனவே
நாமிங்கு நினைத்திருக்க
அத்தனையும் பொய்யாக்கி - எங்கள் (தமிழர்)
அன்பனுடன் நீ சேர்ந்து
தமிழ் பேசும் நெஞ்சங்களில்
நீங்காது நிலைத்து விட்டாய் - அந்த
அன்பான நெஞ்சங்களுக்காய்
உன்னுயிரும் கொடுத்து விட்டாய் - இருந்தும்
நீயுதித்த இப்பொன்னான திருநாளில்
பொய்யற்ற உன்னினைவுடனே
உளமாற வாழ்த்துகிறோம் - இன்று
எவ்வுயிராய் (எவ்வுயிருள்) நீயிருந்தாலும்!....

உன் நினைவுடன்
அப்பா, அம்மா மற்றும்
உன் அன்பு உறவுகள்.

கச்சேரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (356)

## - தென்மாகாண அமைச்சர் படுகொலை -

# இனிமேலும் பொறுக்க முடியாது; சந்திரிகா – பிரதமர் மீது பாய்ச்சல்!



தென்மாகாண சபையின் மீன்பிடி, வர்த்தக, கைத்தொழில்துறை அமைச்சரான ரஞ்சித் கொழும்பு நகரின் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் வைத்துப படுகொலை செய்யப்பட்டமை கொடூரமானதும், மிலேச்சத்தனமானதுமான செயல் என்று வர்ணித்துள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க,

தனது பொறுமையைச் சோதிக்க வேண்டாம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை செய்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த தென்மாகாண சபை அமைச்சர் ரஞ்சித் நேற்று முன்தினம் காலை, கோட்டை உயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் வைத்து இனந்தெரியாத ஆயுதபாணிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தக் கொலை தொடர்பான தகவலை அறிந்ததும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அவசரமாகத் தொலைபேசியில் தொடர்புகொண்டார்.

தொலைபேசி மூலம் இடம்பெற்ற உரையாடலின்போதே இந்தச் சம்பவம் தொடர்பாகத் தனது கடுமையான கண்டனத்தை வெளியிட்ட ஜனாதிபதி சந்திரிகா - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்திற்கும் எச்சரிக்கை விடுத்தார்.

பொலிஸ் தலைமையகம், குற்றப்புலனாய்வுப்பிரிவுத் தலைமையகம், ஜனாதிபதி மாளிகை என்பன அமைந்துள்ள உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் இத்தகைய தாக்குதல் சம்பவம் ஒன்று நடந்திருப்பது அரசாங்கத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கேள்விக்குள்ளாக்கியிருக்கின்றது.


இனிமேலும் எனது கட்சியைச் சேர்ந்தவர்களும், ஆதரவாளர்களும் கொல்லப்பட்டுக் கொண்டிருப்பதைப் பொறுத்துக் கொண்டிருக்கமுடியாது.

பொதுத் தேர்தலுக்குப்பின்னர் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்கள் அறுபது பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர். மூவாயிரத்துக்கும் மேற்பட்ட கட்சி ஆதரவாளர்கள் பல்வேறுபட்ட இழப்புக்களைச் சந்தித்துள்ளனர்.

இத்தகைய சம்பவங்கள் குறித்து அரசாங்கம் எந்த விசாரணையையும் மேற்கொள்ளவில்லை.

சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்க அரசாங்கம் தவறியுள்ளதால் பொறுமையின் எல்லைக்கே சென்றுள்ளேன்.

ஜனாதிபதி மாளிகை, பொலிஸ் தலைமையகம், குற்றப்பலனாய்வுப் பணியகப் பொலிஸ் சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டு, பாதுகாப்புத் தளர்த்தப்பட்டதாலேயே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது.



உயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் இடம்பெற்றுள்ள இந்தக் கொலைக்கு அரசாங்கமே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

அமைச்சர் எஸ்.பி திஸநாயக்க, புத்தளத்திலுள்ள ஒரு அரசியல்வாதி, பொலிஸ்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் ஆகியோர் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களுக்கு எதிராகத் தொடர்ந்தும் அடாவடித்தனங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலை தொடருமேயானால், பொறுமையை இழந்து அரசாங்கத்தின் மீது நடவடிக்கையை எடுக்கவேண்டியநிலை உருவாகும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் - ஜனாதிபதி சந்திரிகா எச்சரிக்கை விடுத்ததாகத் தெரியவருகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - சுட்டுக்கொல்லப்பட்ட தென்மாகாண அமைச்சர் ரஞ்சித்தின் படுகொலை தொடர்பான விசாரணை அறிக்கையை ஜனாதிபதிக்குச் சமர்ப்பிப்பதாகத் தெரிவித்திருந்தார்.

ஆனால், விசாரணை அறிக்கை கையளிக்கப்படுவதை நிராகரித்த ஜனாதிபதி சந்திரிகா - இந்தகைய அறிக்கைகள் வெறும் கேலிக்கூத்து என்றும், குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் பிரதமரிடம் தெரிவித்தார்.

## வற்றாப்பளை பொங்கலுக்கு ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் உற்சவத்திற்கான விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

தற்போதைய சமாதானச் சூழலில் வடக்கு - கிழக்கு தாயகப் பிரதேசம் மற்றும் வெளிநாடுகளில் இருந்து வரும் பெருமளவான மக்கள், இந்தப் பொங்கல் நிகழ்வில் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அடியார்களின் வசதிகளுக்காகப் போக்குவரத்து வசதி, குடிநீர்வசதிகள் போன்ற பல்வேறு வசதிகளை ஏற்படுத்துவது குறித்து அதிகாரிகளால் ஆராயப்பட்டு வருகிறது.

## செல்வச்சந்நிதியான் ஆச்சிரம "ஞானச்சுடர்" வெளியீட்டு விழா!

(யாழ்ப்பாணம்)

செல்வச்சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான "ஞானச்சுடர்" - வைகாசி மாத வெளியீட்டு விழா, எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 12.30 மணிக்கு ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறும்

வெளியீட்டுரையை து.கணேசமூர்த்தியும், மதிப்புரையை செஞ்சொற்செல்வன் இரா.செல்வவடிவேலும் நிகழ்த்துவர்.

"ஞானச்சுடர்" வெளியீடு முடிந்தபின் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

### யாழ்.போதனா வைத்தியசாலையில்

## நோயாளர் தொகை திடீர் அதிகரிப்பு நடைபாதையில் தங்கிச் சிகிச்சை!

யாழ்.போதனா வைத்தியசாலையில் திடீரென நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், விடுதிகள் நிரம்பிவழிகின்றன. இதனால், நோயாளிகள் நிலத்தில் பாய்களில் படுத்துச் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை 24 ஆம் விடுதி மற்றும் ஏனைய சில பிரிவுகளிலும், நோயாளர்களின் தொகை கடந்த சில நாட்களாக அதிகரித்துள்ளது. இதேவேளை, விடுதிகளில் காணப்படும் கட்டில்கள் தொகை போதுமானதாக இல்லாத நிலையில், நோயாளர்கள் 'வைத்தியசாலையின் நடைபாதைகளில் தங்கியிருந்தே சிகிச்சைபெற்று வருகின்றனர். (சு)

## சகல வசதிகளுடன் கூடிய பிராந்திய ஒலிபரப்பு நிலையம்

### யாழ்ப்பாணத்தில் அமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளுடன்கூடிய பிராந்திய ஒலிபரப்பு நிலையம் ஒன்று நிறுவப்படும் என்று, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பிரதிப் பணிப்பாளர் எஸ்.சிவராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் இடம்பெற்ற - வானொலி நேயர்கள், கலைஞர்கள், கல்விமான்கள், சமூகவியலாளர்கள் ஆகியோருடனான சந்திப்பில் உரைநிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாண வானொலிச் சேவையின் நேரத்தை அதிகரிக்கவும், அங்கு ஒரு அலுவலகத்தைத் திறக்கவும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத் துணைவேந்தரின் அனுசரணையுடன் நுண்கலைப்பீடத்தின் ஒரு பகுதியில் கலையரங்கை அமைத்து, வடபகுதிக் கலைஞர்களின் நிகழ்ச்சியைத் தற்காலிகமாக ஒலிபரப்ப வழி செய்ய முடியுமென்றும் அவர் யோசனை தெரிவித்தார்.

## மாபெரும் மகளிர் சங்கமம் மன்னாரில் நடைபெறும்!

(கிளிநொச்சி)

வடக்கு - கிழக்கிலுள்ள மகளிர் அமைப்புக்கள் கலந்துகொள்ளும், மாபெரும் சங்கம நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி மன்னாரில் ஆரம்பமாகித் தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

மன்னார் நகர மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகளை, பெண்கள் மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்டத்திலுள்ள சகல மகளிர் அமைப்பினரும், தமிழர் தாயகப் பிரதேசங்களிலுள்ள மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## புங்குடுதீவில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் வட்டக்கச்சிப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது!

புங்குடுதீவிலுள்ள வீடொன்றை உடைத்துத் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள், தமிழீழக் காவல்துறையினரால் வட்டக்கச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜூன் மாதம் 21 ஆம் திகதி புங்குடுதீவு 9 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தையா பாலசிங்கம் என்வருடைய வீடு உடைக்கப்பட்டு அங்கிருந்த மோட்டார் சைக்கிளும், பெறுமதி வாய்ந்த பொருட்களும் திருடப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக, தமிழீழ காவல்துறையினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து - மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது, இந்த மோட்டார் சைக்கிள் கண்டுபிடிக்கப்பட்டது.

மேற்படி மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு மாற்றப்பட்டு வேறு ஒரு இலக்கம் பொருத்தப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

வட்டக்கச்சி காவல்துறையினரால் கண்டுபிடிக்கப்பட்ட மோட்டார் சைக்கிளினுடைய ஆவணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

## அர்ஜுன ரணதுங்கவிடம் ரூ 500 மில்லியன் நஷ்டஈடு கோருகிறார் திலங்க சுமதிபால!

(கொழும்பு)

தன்னைப்பற்றி உண்மைக்கு மாறான தகவல்களை வெளியிட்டதாகக்கூறி, முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்க மீது, ரெலிகொம் தலைவர் திலங்க சுமதிபால 500 மில்லியன் ரூபா நஷ்டஈடு கோரியுள்ளார்.

கடந்த வாரம் அர்ஜுன ரணதுங்க நடத்திய செய்தியாளர் மாநாடு ஒன்றிலேயே தவறான தகவல்களை வெளியிட்டதாகத் திலங்க சுமதிபால குற்றஞ்சாட்டியுள்ளார். இதற்கு நஷ்டஈடாக 500 மில்லியன் ரூபா தரவேண்டும் என்றும் -

இது தொடர்பாக, செய்தியை வெளியிட்ட 'லங்காதீப' பத்திரிகை ஆசிரியர் ஸ்ரீ ரணசிங்கவும் நஷ்டஈடு தரவேண்டும் என்றும், தனது சட்டத்தரணி மூலம் திலங்க சுமதிபால அறிவித்தல் கொடுத்துள்ளார்.

இதேவேளை, 'லங்காதீப' பத்திரிகை - கடந்த வெள்ளிக்கிழமை பதிப்பில் தான் வெளியிட்ட செய்திக்கு மன்னிப்புக்கோரியதை அடுத்து, அதன் மீதான நஷ்டஈட்டுக் கோரிக்கை கைவிடப்பட்டுள்ளது.

ஆனால், அர்ஜுன ரணதுங்க ஜூன் 3 ஆம் திகதிக்குள் நஷ்டஈடு செலுத்தாவிட்டால், சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் திலங்க சுமதிபாலவின் சட்டத்தரணி அறிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜூன் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைத் தலைவர் பதவிக்கான தேர்தலில், அர்ஜுன ரணதுங்கவும், திலங்க சுமதிபாலவும் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## தெங்குப்பயிர் அபிவிருத்திக்கு ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு

### அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல அறிவிப்பு

நவீன தொழில்நுட்ப வளங்களைப் பயன்படுத்தி நாட்டின் தெங்குப் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்யவுள்ளதாக அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

1999 ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட வறட்சி நிலைமையினால் 70 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் அமைந்திருந்த தென்னைகள் முற்றாக அழிவடைந்திருந்தன.

இந்த அழிவை ஈடுசெய்வதற்கே, புதிய தொழில்நுட்பத்துடன் தெங்குப்பயிர் நடுகைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. வடக்கு - கிழக்குப் பகுதிகளில் யுத்தத்தினால் 20 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் அமைந்திருந்த தென்னை மரங்கள் அழிந்து போய் விட்டதாகவும் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்தார்.

### படுகாயம்

வீதிக்குக் குறுக்கே போடப்பட்டிருந்த முட்கம்பிச் சுருளில் சிக்கி, சைக்கிளில் வந்த இருவர் படுகாயமடைந்த சம்பவம் - கடந்த புதன்கிழமை மிருசுவிலில் இடம்பெற்றது. சிவஞானராசா (வயது 19), சி.பாஸ்கரன் (வயது 23) ஆகியோரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# வரணி, நாவற்குழி பகுதிகளில் மண் அகழ்வதற்கு அனுமதி!

## சாவகச்சேரி பிரதேச செயலக கூட்டத்தில் முடிவு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதிப் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு, மண்ணைப் பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமங்கள் குறித்து ஆராய்வதற்காக, கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

சாவகச்சேரி பிரதேச செயலாளர் க.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், தென்மராட்சிப் பகுதிப் புனரமைப்பு வேலைகளுக்காக வரணி மற்றும் நாவற்குழிப் பகுதிகளில், சூழல் பாதுகாப்புக் குழுவின் மேற்பார்வையுடன், மண் அகழ்ந்து எடுக்க அனுமதிப்பதென முடிவுசெய்யப்பட்டுள்ளது.

மண் உரிமையாளருக்கு 300 ரூபாவும், மண் ஏற்றும் கூலி 150 ரூபாவும் சூழல் பாதுகாப்புக் குழுவுக்கு 50 ரூபாவும், ஒவ்வொரு மண் ஏற்றும் உழவு இயந்திரத்துக்கான உரிமையாளரிடமும் அறவிடுவதென முடிவு செய்யப்பட்டது.

இதேவேளை, கச்சாய்ப் பகுதியில் மண் அகழ்வதனால் - கடலரிப்பு ஏற்படும் அபாயம் உள்ளதால் மண் அகழ்வை அங்குதடை செய்வதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# ஆதனவரி நிலுவைகளை நீக்குவதற்கு உள்ளூராட்சி சபைகளுக்கு அதிகாரம்

## வட - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அறிவிப்பு

வடமராட்சிப் பகுதியிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில், 1987ஆம் ஆண்டு தொடக்கம் 2001ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குரிய, ஆதனவரி நிலுவைகளை நீக்குவது சம்பந்தமாக, வட - கிழக்கு மகாண உள்ளூராட்சி ஆணையாளர், ரி.ரி.விஜயலட்சுமி உள்ளூராட்சி மன்ற செயலாளர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் விடுத்த வேண்டுகோளை அடுத்து, இந்தச் சுற்றுநிருபம் உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்படடுள்ளதாவது - பிரதேச சபை சட்டம் 158(2) பிரிவு நகரசபை கட்டளைச் சட்ட பிரிவு 170 என்பனவற்றின் கீழ் ஆதனவரி சம்பந்தமாக, அந்தந்த இடங்களில் ஏற்பட்ட பிரச்சினைகள், இடப்பெயர்வுகள், அழிவுகள் அவற்றை பரிசீலித்து தீர்மானித்துப் பதிவழிக்கும் நடவடிக்கை எடுப்பதற்கு, உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிகாரமுள்ளது.

எனவே, ஆய்வு உத்தியோகத்தர்கள், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோரின் உதவிகளைப்பெற்று நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனையின் பிரதிகள், யாழ்.உள்ளூராட்சி உதவியாணையாளருக்கும், உடுப்பிட்டி தமிழ் காங்கிரஸ் செயலாளருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் உயர் வகுப்பு மாணவர் மன்றத்தின், 'விடிவை நோக்கி' சஞ்சிகை வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. அதில், உயர்வகுப்பு மாணவர் மன்றப் பொருளாளர் கவிதா சிறிஸ்கந்தராசாவிடமிருந்து, பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர் என்.திருச்செல்வம் பிரதியைப் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

### மாணவனை மோதிவிட்டு ஓடி மறைந்த ஓட்டோ

(யாழ்ப்பாணம்)

பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த மாணவனை, ஓட்டோ ஒன்று மோதிவிட்டு ஓடி மறைந்த சம்பவம், நேற்றுமுன்தினம் மந்திகையில் இடம்பெற்றது.

புலோலி மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த, ஜெகதீஸ்வரன் டிலகசன் (வயது 9) என்ற மாணவனே, ஓட்டோவினால் மோதுண்டு படுகாயமடைந்த நிலையில் - மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார்.

ஓட்டோவையும் சாரதியையும் பருத்தித்துறைப் பொலிஸார் தேடி வருகின்றனர். (17)

### சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

புலோலி தெற்கில் வீட்டிற்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்று நேற்றுமுன்தினம் திருடப்பட்டது. (17)

# வீதியால் சென்றவர் மீது பாலை மரம் முறிந்து வீழ்ந்தது

## முறிகண்டியில் சம்பவம்

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வேளை, பாலை மரக்கிளை திடீரென முறிந்துவீழ்ந்ததில் வீதியால் சென்றுகொண்டிருந்த ஒருவர் படுகாயமடைந்தார். இவரது மோட்டார் சைக்கிள் பலத்த சேதமடைந்தது.

முறிகண்டிப் பகுதியில் கடந்த சனிக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில், இடம்பெற்ற இச்சம்பவத்தில் எஸ்.தயாபரன் (வயது 30) என்பவரே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# தெல்லிப்பளை கூட்டுறவுச்சங்க பணியாளர் ஒன்றுகூடல்!

தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கப் பணியாளர் ஒன்றுகூடல் நாளை மறுநாள் வியாழக்கிழமை காலை 9 மணிக்குச் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த ஒன்றுகூடலின் ஒரு நிகழ்வாக, ஊழியர் தொழிற்சங்க தெல்லிப்பளைக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம், ச.திருஞானசம்பந்தர் தலைமையில் இடம்பெறும்.

முதன்மை விருந்தினராக, தெல்லிப்பளைக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.சிவமகாராசாவும், சிறப்பு விருந்தினர்களாக - யாழ்.மாவட்டக் கூட்டுறவுப் பொறுப்பாளர் பொ.புஷ்பகுமார், அரசியற்துறைத் தொழிற்சங்கப் பொறுப்பாளர் இமையவன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை, காலை 10 மணியளவில், பணியாளர் சிக்கன சேமிப்புக் கடனுதவு கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம், க.துரைசிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில், முதன்மை வீருந்தினர்களாக - யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கனகசபாபதி, யாழ்.மாவட்ட கணக்காய்வுக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், பொ.சிவலிங்கம், யாழ்.மாவட்ட பனை தென்னை வள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், க.கணேசமூர்த்தி ஆகியோர் கலந்துகொள்வர். கௌரவ விருந்தினராக சி.சிவமகாராசாவும், சிறப்பு விருந்தினராக க.கணேசும் கலந்துகொள்ளவுள்ளனர்.

தெல்லிப்பளைக் கூட்டுறவுச் சங்க, பணிப்பாளர் நலன்புரிச்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம், 29 ஆம் திகதி காலை 11 மணிக்கு இடம்பெறவுள்ளது. து.சிவகுமார் தலைமையில் இடம் பெறும் இக்கூட்டத்தில், முதன்மை விருந்தினர்களாக - யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ்.மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் விஜிதரன் ஆகியோரும் சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் செயலாளர் சிவசுப்பிரமணியம், மக்கள் வங்கிப் பிராந்திய அலுவலர் பொன்.கணேசமூர்த்தியும், கௌரவ விருந்தினராக, சி.சிவமகாராசாவும் கலந்துகொள்ளவுள்ளனர்.


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

இரண்டாவது அகவையில்



பெயர் : ஜெ.அமலஜீவனா

முகவரி: 10 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

ஐந்தாவது அகவையில்

பெயர் :ஜோ.வேதிகா

முகவரி: அல்வாய்.



ஒன்பதாவது அகவையில்



பெயர் : வி.பிரதாபன்

முகவரி: 3 ஆம் கட்டை, துன்னாலை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------------
பெற்றார் ஒப்பம்


# யாழ்., முல்லை, கிளிநொச்சி மாணவர் பங்குகொள்ளும் புத்தகக் கண்காட்சி

## ஜூலையில் நடத்த புத்தக ஆணைக்குழு ஏற்பாடு

இலங்கை புத்தக ஆணைக் குழு கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலுள்ள, பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்குகொள்ளும் பாடசாலை புத்தகக் கண்காட்சியொன்றை, எதிர்வரும் ஜூலை மாதம் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் நடத்தவுள்ளது.

இதில்- தரம் 6,7,8,9 ஆகிய வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்கள், கனிஷ்ட பிரிவில் பங்குபற்றலாம். தரம் 10,11,12,13 ஆகிய வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்கள், மேற்பிரிவில் பங்குபற்றமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கண்காட்சியில் ஒவ்வொரு பிரிவிலும், முதலிடம் பெறும் மாணவர்களுக்குத் தங்கப்பதக்கமும் 5 ஆயிரம் ரூபா பரிசும் வழங்கப்படும். இரண்டாம் இடத்தை பெறுபவருக்கு வெள்ளிப் பதக்கமும் 3 ஆயிரம் ரூபாவும், மூனறாம் இடத்தைப் பெறும் மாணவர்களுக்கு வெண்கலப் பதக்கமும் 2 ஆயிரம் ரூபாவும் பரிசாக வழங்கப்படும்.

இதேவேளை - சிறந்த ஆக்கங்களுக்கு திறமைக்கான பரிசில்களும், பங்குகொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

மேலும்- ஒவ்வொரு பிரிவிலும், முதல் 3 இடங்களைப் பெறும் மாணவர்களின் பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்களுக்கு வெகுமதிகளும் வழங்கப்படும். அத்துடன், கண்காட்சிக்கான ஆக்கங்களை தயாரிக்கும் செலவின் ஒருபகுதி, ஆணைக்குழுவினால் மீளளிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### யானைகள் அட்டகாசம்

அக்கராயன் - துணுக்காய் பிரதான வீதியில், அண்மைக்காலமாக காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருகின்றது. கோட்டைகட்டிப் பகுதியூடாக போக்குவரத்து செய்வோருக்கு, யானைகள் அச்சுறுத்தலாக அமைவதுடன், அப்பகுதியிலுள்ள தென்னம்பிள்ளைகளையும் இவை பிடுங்கித் துவம்சம் செய்து வருகின்றன. யானைக் கூட்டம் பகல் வேளைகளிலும் நடமாடுவதாகவும், இதனால் இவ்வீதியில் நடமாடுவது அச்சத்திற்குரிய ஒன்றாக மாறிவிட்டது என்றும் கூறப்படுகின்றது.

# போதிய வசதிகளின்றி இயங்கும் அராலி மேற்கு சனசமூக நிலையம்

(மானிப்பாய்)

அராலி மேற்கு சனசமூக நிலையம்- கட்டட வசதியற்ற நிலையில், பெரும்சிரமத்தின் மத்தியில் இயங்கி வருவதாக அவ்வூர் மக்களால் புகார் தெரிவிக்கப்படுகிறது.


இச்சனசமூக நிலையக் கட்டடத்திலேயே- சிறுவர் பாடசாலை, மாதர் சங்கம், இளைஞர் முன்னேற்றக்கழகம், விவசாய சம்மேளனம், மாதர் சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் தையற் பயிற்சிநெறி மற்றும் மாலை நேரவகுப்புகளும் இயங்கிவருகின்றன.

இவை அனைத்துமே ஒருசேர இந்நிலையத்தில் இயங்குவதால், பெரும் நெருக்கடிநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (100)

# திரை விமர்சனம்

## புதிய கீதை

கீதை என்ற ஆரம் பப் பெயர் சர்ச்சைக் குள்ளாகிப் புதிய கீதை என்ற புதுப்பெயருடன் வெளியிடப்பட்டது. பெயரில் மட்டும் ஏதோ புதிது. விஜய்யின் தோல்விப் படப்பட்டியலில் இதுவும் புதிய வரவு. இப்படத்தில் விஜய்யின் உரையாடல் தேவையற்றவகையில் மிகவும் நீளம். சில சமயம் சலிப்பை ஏற்படுத்துவன. சாரதி என்ற பெயரில் வரும் விஜய் இங்கு மிகைப்படுத்தலாகவே நடிக்கிறார். அவருக்கு உலகிலுள்ள அனைத்தும் தெரியுமாம். அதுபற்றி இடையிடையே விரிவுரை வேறு. தனக்கு ஏழாவது உணர்வும் இருப்பதாகக் கூறும் இடங்கள் மிகைப்படுத்தலின் உச்சம்.



ஒரு பிரபல சோதிடரின் கிராமத்தில் ஏழை வண்டிச்சாரதியின் மகனாகப் பிறக்கும் விஜய்யின் பிறப்புக் குறிப்பைப் பார்வையிடும் அச்சோதிடர் - இவன் தன்னைச் சுற்றியிருக்கும் அனைவருக்கும் நல்லதைச் செய்து மகிழ்விக்கும் அபார சக்தியைக் கொண்டிருப்பதாகக் கூறுகிறார். ஆனால், 27 வயதில் மரணம் என்றும் கூறிவிடுகிறார்.

சோதிடப்படி அனைத்தும் நடந்துவருகிறது. விஜய்யின் சகதோழியாக வரும் சுஷி (மீரா ஜஸ்மின்) பணக்கார வீட்டுப் பெண். இவரின் நண்பி ஜோ (அமிஷா பட்டேல்). இவருக்குத் தொழில் பெற்றுக்கொடுக்க விஜய் முயல்கிறார். இறுதியில் சோதிடம் கூறியபடி கடுமையான நிலையில், விஜய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகிறார். உயிருடன் மீள்கிறாரா, சோதிடம் பலிக்கிறதா என்பது இறுதிக்கதை.

விஜய்யின் நடிப்போ, பாத்திரமோ பெரிதாக எடுபடவில்லை. நாயகிகளான மீரா ஜஸ்மினும், அமிஷா பட்டேலும் விசேடமாகக் குறிப்பிடத்தக்க வகையில் நடிப்பைக் காட்டவில்லை. வில்லனாக வரும் கலாபவன்மணி ஜமாய்க்கிறார்.

யுவன் சங்கர்ராஜா இசை ஏமாற்றிவிட்டது. இப்படத்தை எடுக்கமுன் இயக்குநர் ஜெகன் ஒன்றுக்கு இரண்டு தடவை சிந்தித்திருக்கலாம். ஏனெனில், இது பார்வையாளர் மனதில் பதியக்கூடிய படமல்ல.

- துஷி.

# கணவன் மனைவி சேர்ந்து தீர்மானம் எடுப்பதே சிறந்தது

(சென்றவாரத் தொடர்ச்சி...)

சரீர உதவி, பண உதவி போன்றவற்றைக் காட்டிப் பிள்ளையைத் தன்னில் தங்கப் பண்ணுவாள் தாய். தான் இல்லாது வாழமுடியாத அளவுக்கு உதவிகளைச் செய்து தங்கப் பண்ணுவாள்.

மறுபக்கத்தில் பெற்றோரில் தங்கி வாழபபழகாது, சுயாதீனமாக வாழப் பிள்ளைகளும் கற்றுக்கொள்ள வேண்டும். அதன் அர்த்தம் பெற்றோரைக் கவனிக்கவேண்டாம் என்பதல்ல. பெற்றோரைக் கவனிப்பது பிள்ளைகளின் பொறுப்பாகும். பெற்றோர் பிள்ளைகளுக்குச் செய்யும் பெரிய உதவி தம்மில் தங்கிவாழாது, சுயாதீனமாகத் தீர்மானம் எடுத்து வாழப் பழக்குவதாகும்.



03. பெற்றோருக்குப் பணவுதவி செய்யும்போது, அவர்களுக்குச் செலவழிக்கும்போது, இருவரும் கலந்துரையாடிச் செய்வது நன்று. இதில் ஒருவர் மற்றவரது நிலையைப் புரிந்துகொள்வதும், பொறுமையும் தேவை. மற்றவரது மனம் நோகாமல் உதவி செய்வது நன்று. ஒளித்துச் செய்வது நல்லதல்ல.

04. பெற்றோரின் ஆசீர்வாதம் இல்லாது திருமணம் முடித்தோர் - தமது குடும்பத்தை நல்லமுறையில் கொண்டுசெலுத்த, மற்றவர்களைவிட அதிகமாகச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

05. இருவருக்கிடையிலும் பிரச்சினை ஏற்பட மற்றொரு காரணமும் உண்டு. சில வேளைகளில் ஒருவருக்கு மற்றவரில் கோபம் ஏற்படலாம். புகழ்ச்சி, வரவேற்பு, அதிகமாக ஒருவருக்கு மற்றவரிடமிருந்து கிடைக்காமல் இருக்கலாம். ஒருவர் மீது மற்றவர் குற்றம் சுமத்துவதே கூடுதலாக இருக்கும். இது எல்லாக் குடும்பங்களிலும் பெரும்பாலும் பொதுவானதே. ஆகவே, எந்தநேரமும் ஏச்சும் பேச்சுமே கிடைக்கிறது என்று கலவரப்பட வேண்டிய அவசியமில்லை. நெருக்கமில்லாத ஒருவர் மற்றவரை விமர்சனம் பண்ணும்போது தாங்கக்கூடிய வேதனையே ஏற்படும். ஆனால், அன்பு செய்யும், நெருக்கமாகப் பழகும் ஒருவர் பிழையாக விமர்சனம் பண்ணும்போது - அதனைத் தாங்கமுடிவதில்லை. ஒருவர் மற்றவரைப் புண்படுத்துவது குறிக்கோளல்ல என்று மனதில் நினைத்துக் கொள்ளவேண்டும். மற்றவர் ஏசும்போது அதற்குச் செவி சாய்த்து இதனைத் தன்னால் ஏற்றுக்கொள்ள முடியுமா, இல்லையா என்று சிந்திக்க வேண்டும். தன்னைப் பற்றி மற்றவர் ஏன் அப்படிச் சிந்திக்கிறார். ஏன் இப்படி இவருக்குத் தன்னைத் தெரிகிறது எனச் சிந்திக்கவேண்டும். காலையிலிருந்து மாலை வரை எனது வாழவில் மனம் நோகக்கூடியதாக ஏற்பட்ட நிகழ்ச்சிகளைச் சேர்த்துக்கொண்டு இருக்கிறேனா? அல்லது காலையில் இருந்து மாலைவரை நடக்கும் புகழ்ச்சி, வரவேற்பு போன்றவற்றைச் சேர்க்கின்றேனா? எனச் சிந்திக்கவேண்டும். நாம் மற்றவரைத் திருத்தும்போது, பிழையைச் சுட்டிக்காட்டும் போது - குரல், முகபாவம் போன்றவற்றிலும் உணர்வை வெளிப்படுத்துகின்றோம். கூறுவது கோபத்திலா, ஆத்திரத்திலா, சந்தோஷத்திலா என்பது எனது குரல், முகபாவத்தைக்கொண்டு மற்றவருக்குத் தெரிந்துவிடும். உணர்வுகளை அடக்கு வதும் பிழை. நடந்த நிகழ்ச்சிக்கேற்ப வெளிப்படுத்தவேண்டும். கணவன் - மனைவி இருவரும் ஒருவர் ஒருவரைக் கீழ்ப்படுத்தி வைப்பதல்ல. இருவரும் சேர்ந்து தலைமைத்துவம் செய்வது, தீர்மானம் எடுப்பதே நன்று.

- எஸ்.ஜே. யோகராஜா

# பல்சுவை அரங்கு

# உலகப் புகழ் பெற்ற இயக்குநர்கள்

இருபதாம் நூற்றாண்டின் இருபதுகள் உலக சினிமாவில் உயர்தரமான படங்களின் பெருக்கம் நிறைந்த ஒரு காலகட்டம். அன்று கலைப் படைப்புகளில் முன்னணியிலிருந்த ரஷ்யா, பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகளின் தரத்துக்கு ஈடாக ஜெர்மானிய சினிமாவும் வளர்ச்சி பெற்றிருந்தது. உலகின் மிகச் சிறந்த திரைப்படங்களைக் குறிப்பிடும் பொழுது - கபினட் ஒவ் டொக்டர் கொலிஹறி (**CABINETE OF DR. GOLIHERI**), டொக்டர் மபூஸே தி கம்ப்ளர் (**DR. MABUSE THE GAMPLER**) போன்ற ஜேர்மானியப் படங்களைத் தவிர்க்கமுடியாது.




பிரிட்ஸ் லாங்கின் மெட்ரோ பொலிஸ் படத்தின் காட்சியை விளக்கும் சுவரொட்டி.

மற்ற நாடுகளின் கலைப் படைப்புகளைப் போலவே ஜேர்மானிய சினிமாவும் யதார்த்தப் பாணியில் அமைந்திருப்பினும், அவை கூடவே ஒருவிதப் பிரத்தியேக வெளிப்பாட்டுத் தன்மையும் (**EXPRESSNIST**) கொண்டிருந்தன.

ஒரு நகைச்சுவை நடிகராகப் படங்களில் நடித்துக் கொண்டிருந்த எர்னஸ்ட் லுபிட்ஸ்ச் (**ERNEST LUBITCH**) 1951 இல் ஒரு டைரக்டரானார். இவருடன் டைரக்டர் போல் வெகனரும் (**PAUL VEGAUNNER**) அதேசமயத்தில் அறி

## ∴பிரிட்ஸ் லாங்

முகமானார் எனலாம். இந்த இருவரும்தான் ஜேர்மானியத் திரைப்படத்துறையையே சீரமைத்தவர்கள். ஜேர்மன் நாடகத்துறையிலிருந்து வந்த எவ். டபிள்யூ. முர்னேவையும் இந்தப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம். 1918 இல் லுபிட்ஸ் - கார்மென் (**CARMEN**) படத்தின் மூலமாக உலக அரங்கில் அறிமுகமானார். மேடம் துபாரி (**MADAM DUBARI**), தி வைய்ஸ்ட்டர் பிரின்ஸ் (**THE WGYSTER PRINCE**), தி டோல் (**THE DOLL**) போன்றவை லுபிட்ஸ்சின் புகழ்பெற்ற மற்றும் சில படைப்புகள்.

1918 - 1919 ஆம் காலகட்டத்தில் தி ஸ்டுடன்ட் ஒவ் ∴பிராக் (**THE STUDENT OF FRAG**) என்கிற படத்துடன் போல் வெனகனர் டைரக்டராக அறிமுகமானார். 1920 ஆம் வருடம் இவர் இயக்கிய தி கோலெம் (**THE KOHLEM**) என்கிற படத்தின் மூலம் கவனத்துக்குரியவரானார். இந்தப் படத்தின் மற்றுமொரு சிறப்பு முழுக்க முழுக்க விசித்திரமும், அழகும் நிறைந்த பிரமிப்பேற்படுத்தும் **SET**களில் படம் பிடிக்கப்பட்டிருந்த தன்மைதான். மிகப் பெரிய **SET**களில் படம் எடுக்கும் முறை இதிலிருந்துதான் தொடங்குகிறது. பிரமாண்ட முறை இதிலிருந்து சினிமாவின் மற்றொரு அம்சமாக வளரத் தொடங்கியது. தி கபினட் ஒவ் டொக்டர் கொலிஹறிஷ் படம் பின்னாளில் ஹிட்லர்-ஜேர்மானிய சர்வாதிகாரியாக மாற ஒரு வகையில் உதவியிருக்கிறதென்று ∴புரம் கொலிஹறி ரு ஹிட்லர்' என்கிற புத்தகத்தில் புகழ்பெற்ற ஜேர்மானிய திரைப்பட வல்லுநர் 'சிக் ∴பரைட் கிராக்கர்' குறிப்பிடுகிறார். டொக்டர் கொலிஹறி என்கிற பாத்திரம் மனநிலை பாதிக்கப்பட்ட மனோவியல் ரீதியாக வக்கிரம் பெற்ற ஒரு படைப்பு.

இதற்குப் பிந்திய காலகட்டங்களில் பிரக்து, தொமஸ்மன், பாப்ஸ்ட், முர்னாவ் போன்றவர்களும் தங்கள் படைப்புகளை வெளியிட்டனர். உலக மார்க்கெட்டில் ஹொலிவுட் படங்களுடன் ஜேர்மானியப் படங்களும் போட்டியிட்டன. இந்த ஆரோக்கியமான சூழலில்தான் ∴பிரிட்ஸ் லாங் ஓர் இயக்குநராக வெளிப்பட்டதும் நிகழ்ந்தது.

∴பிரிட்ஸ் லாங்குக்குப் பிறகும் ஜேர்மானிய சினிமாவில் கார்ல் மேயர், வால்டரூத்மன் (யதார்த்தமான ஜேர்மானிய நாட்டின் நிலையை உலகத்துக்கு உணர்த்த முயன்றார் என்கிற குற்றச்சாட்டின் பேரில் நாஸிகளால் யுத்தகளத்துக்கு அனுப்பப்பட்டார். அங்கேயே கொடூரமாகக் கொல்லப்பட்டார்). போன்றோரும் புகழ்பெற்றனர். ரூத்மனின் சிறந்த படைப்புகளாக 1925 இல் வெளிவந்த பெர்லின் சிம்பனி ஒவ் கிரேட் சிற்றி, மெலடி ஒவ் த வேர்ல்டு போன்றவற்றைக் கூறலாம். எவ். டபிள்யூ. மர்னாவின் 'நொஸ்∴பெராட்' 1924 இல் இவர் வெளியிட்ட தி லாஸ்ட் லா∴ப் படத்தில் எடிட்டிங்கே தேவையில்லாத வகையில் ஒளிப்பதிவு செய்து புதுமையைப் புகுத்தினார். இவரது பாணியைப் பின் பற்றி ஈ.ஐ. டுப்பான்ட் என்கிற இயக்குநர் 1926 இல் வெரைட்டி என்கிற படத்தை வெளியிட்டார்.

அடுத்த படியாக ஜி. டபிள்யு. பாப்ஸ்ட் 1923 இல் தி ட்ரஷர் படத்தின் மூலம் டைரக்டரானார். இவரது ஜாய்லெஸ் ஸ்ட்ரீட், தி லவ் ஆ∴பஷானே, பன்டோராஸ் ∴பார்ஸ் ஸீக்ரட்ஸ் ஒவ சௌல் ஆகியவற்றைச் சொல்லாம். டைரக்டர் போல் வெகனரின் ஹஸ்பெண்ட் ஆர்.லவர்?, ஏரியன், ட்ரீமிங் லிப்ஸ் போன்ற படங்களும் கவனத்துக்குரியன. மாக்ஸ் ஒ∴பெல்ஸின் படங்களும் இதேபோன்ற தரத்தில் அமைந்துள்ளன.

# வாரம் ஒரு யோகாசனம்



## சவாசனம்

தரையில் மேல் மல்லாந்து படுத்து, இரு கால்களையும் சேர்த்து நேராக நீட்டி, உடலைச் சேர்ந்தாற்போல் இரு கைகளையும் நீட்டிப் படுக்கவேண்டும். ஆசனங்களைப் பயின்ற பின் தோன்றும் சோர்வையும், கடின உழைப்பிற்குப் பின் தோன்றும் சோர்வையும் நீக்கிக் கொள்ள உதவும் ஆசனமாகும். இதனால் மனஅமைதி உண்டாகும். 10 நிமிடம் செய்தால் போதுமானது. முடிக்கும்போது கால் விரல்களையும், காலையும் சற்று அசைத்துவிட வேண்டும்.

### சவாசனத்தின் நன்மைகள்.

மனநிலையில் மிகுந்த அமைதியும், நிம்மதியும் கிடைக்கும். தளர்ச்சியை நீக்கிப் புத்துணர்வு பெறவைக்கும். நரம்புகளின் தளர்ச்சி நீங்கிப் புதுவலிமை கிடைக்கும். எண்ணங்கள் மிகத் தெளிவாகவும், தீர்க்கமாகவும் அமையும். தூக்கமின்மை, இரத்தக் கொதிப்புப் போன்ற நோய்களைக் குணமாக்கும். (முற்றும்)

கற்றுத்தருபவர் - மா. மகாநேசன் (கரவெட்டி)

# உலகின் மிக உயரமான பூ!




ஜேர்மனியின் பொண் பல்கலைக் கழகத்தில் உலகின் மிக உயரமான பூ ஒன்று மலர்ந்துள்ளது. இப்பூவை இதுவரை 2000 பேர் பார்வையிட்டுள்ளனர். ரைரன் அரும் (**Titan Arum**) எனும் இந்தப் பூ சுமார் மூன்று மீற்றர் உயரமானது. 71 வருடங்களுக்கு முன் உயரச்சாதனை படைத்த பூவைவிட இது ஏழு சென்ரிமீற்றர் கூடுதல் உயரம் கொண்டுள்ளது.


'சடலப்பூ' என்ற பெயரைக் கொண்ட இந்தப் பூ - லில்லி வகைப் பூக்களைப் போன்ற அமைப்பையும், ஊதா நிறத்தையும் கொண்டுள்ளதுடன், அழுகிய இறைச்சியின் மணத்தையுடையது. இரண்டு நாட்களில் இந்தப் பூ வாடிவிடும் என்பதால் ஏராளமான மக்கள் இதைக் காணப் பல்கலைக்கழகத் தாவரவியல் பூங்காவில் முண்டியடிக்கின்றனர்.

இந்தப் பூவின் மூதாதை 1878 ஆம் ஆண்டு இந்தோனேசியாவின் மேற்கு சுமத்ரா மழைக்காட்டுப் பகுதியில் முதன்முதல் கண்டுபிடிக்கப்பட்டது. இப்போது பூத்துள்ள மரம் 15 வருட வயதைக் கொண்டது.

# ஆப்கானியர் சிறுநீரில் ஆபத்தான அளவில் யுரேனியம்!

ஆப்கானிஸ்தானில் பொது மக்களிடையே நடைபெற்ற ஆய்வொன்றில், அவர்களது சிறுநீரில், பிரமிக்கத்தக்கவகையில் யுரேனியம் கலந்திருப்பது தெரியவந்துள்ளது.





இதேபோன்று, 1991 வளைகுடாப் போரின் பின்னரும் ஈராக் மக்களிடையே - சிறுநீரில் யுரேனியம் அதிகம் காணப்பட்டது. ஆப்கானிஸ்தான் போரில் - அமெரிக்கா வீசிய கதிர்வீச்சுகள் கொண்ட குண்டுகளினாலேயே இந்தநிலை ஏற்பட்டுள்ளதாம்.

யுரேனியப் புகைத் தாக்குதலினால் பல்வேறு நோய் அறிகுறிகளும் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சாதாரணமாகச் சிறுநீரில் 9.4 நனோகிராம்ஸ் யுரேனியம் காணப்படும். ஆப்கானிஸ்தானில் சிலருக்கு 315.5 நனோகிராம்ஸிலிருந்து 2,031 நனோகிராம்ஸ் வரையிலான யுரேனியம் காணப்படுவது தெரியவந்துள்ளது.

ஆனால், தாம் ஆப்கானில் யுரேனியக் கலப்பு ஆயுதங்களை உபயோகிக்கவில்லை என அமெரிக்கத் தரப்பில் மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செவ்வாயின் தென்பகுதியே

செவ்வாய்க்கிரகத்தில் மனிதன் வாழக்கூடிய பகுதி எதுவென்பது குறித்துத் தற்போது ஆய்வுகள் நடைபெறுகின்றன. இதுவரையான ஆய்வுகளில் செவ்வாயின் தென்னரைக் கோளப் பகுதியே இதற்கு வாய்ப்பான பிரதேசம் எனக்கண்டறியப்பட்டுள்ளது.



## உயிர் வாழ ஏதுவான இடம்

இங்கே குறிப்பிட்ட காலப்பகுதியில் நீர் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. ரசல் வெடிப்பு எனும் பகுதியில் நீருடன் மண்கலந்த நிலையில் மண்சரிவுகளும் காணப்படுவதாக ஜேர்மன் விண்ணியல் நிறுவனம் தெரிவிக்கின்றது. விரைவில் அனுப்பப்படவுள்ள செவ்வாய் மண்டல ஆய்வு விண்கலங்கள் இந்த ரசல் வெடிப்புப் பகுதியிலேயே ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளன. இதைவிட, அமெரிக்காவும் இரண்டு விண்கலங்களைச் செவ்வாய்க்கு அனுப்பவுள்ளது.

# 65 வருடங்களாக



## ஓய்வூதியம் பெறும் முதியவர்

இந்திய மாநிலமான இராஜஸ்தானில் ஒருவர் கடந்த 65 வருடங்களாக ஓய்வூதியம் பெற்றுவரும் அதிசயம் நடக்கிறது. ஹபீப்மியான் எனும் இவர் - 1938 ஆம் ஆண்டு சேவையில் இருந்த ஓய்வு பெற்றார். இப்போது அவருக்கு வயது 132 மட்டுமே. எனினும், ஓய்வூதியப்பதிவுகளின்படி இவருக்கு 125 வயது எனத் தெரிகின்றது. இத்தகவல் சரியானால் இப்போது உலகில் உயிர்வாழும் அதிகூடிய வயதுடையவராக இவர் இருப்பார். சரியான பிறப்புப்பதிவின்மையால், சரியான வயதை நிரூபிக்க முடியாதுள்ளார். எனினும், உலகில் அதிக காலம் ஓய்வூதியம் பெறும் மனிதன் என்ற சாதனை இவருககு உண்டு.

வங்கி அதிகாரிகள் இவரிடம் நேரில் சென்று ஓய்வூதியத்தை வழங்கி வருகின்றனர். இத்தகைய ஒருவருக்கு ஓய்வூதியம் வழங்குவதில் இந்தியன் வங்கி பெருமையடைவதாக அதன் முகாமையாளர் ராகேஸ் நக்பால் கூறுகின்றார். வங்கிக்கு வந்து அலையவேண்டாம் என நாம்தான் அவரைக்கேட்டோம் என்றார் நக்பால்.

# பாலியல் கண்காட்சி கொரியாவில் திறப்பு

கொரியர்கள்- ஆசாரசீலர்கள் எனற பாரம்பரியக் கருதுகோளை உடைத்து, தென் கொரியாவில் முதன் முதலாக பாலியல் அருங்காட்சியகம் ஒன்று திறந்துவைக்கப்படடுள்ளது. சுமார் 300 பாலியல் தொடர்பான காட்சிகள் கொண்ட படங்கள் இக்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.




நூற்றாண்டு பழமையான இந்த ஓவியங்களைக் காண ஏராளமானவர்கள் இங்கே கூடுகின்றனர். இந்தியா, திபெத், ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து இத்தகைய காட்சிப் பொருட்கள் இங்கு வந்துள்ளன.

கொரியாவில் பாலியல் பற்றிப் பேசுவது, பார்ப்பது என்பதெல்லாம் கடும் அபத்தமாகக் கருதப்படுகின்றது. ஆனால், 'எமது மூதாதையர்கள் பாலியலை எவ்வாறு கையாண்டனர் என்பதைப் புலப்படுத்துவதே இக்கண்காட்சி' என்கிறார் ஏற்பாட்டாளர்களில் ஒருவர்.

# தொப்பை விழுவது

அதிகம் வயிறு வைப்பது பெண்களை விட ஆண்களுக்குத்தான். என்பது பிரிட்டனில் நடந்த ஓர் ஆய்வில் தெரியவந்துள்ளது. பெண்கள் மாமிச உணவு மற்றும் கொழுப்பு உணவுகளை உள்ளெடுப்பது குறைவு. மரக்கறி வகைகளையே அவர்கள் அதிகம் நாடுகின்றனர். ஆனால், இதற்கு நேர்மாறாக ஆண்கள் உள்ளனர். இதுவே, அவர்களின் தொப்பை வயிற்றுக்குக் காரணம் எனப் பிரிட்டனில் நடந்த கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது.



ஆய்வுக்குட்பட்டவர்களில், அரைப்பகுதி ஆண்கள் நிறை அதிகமாக இருந்தனர். மூன்றில் ஒரு பெண்கள் அதிக

## ஆண்களுக்கே


நிறையைக் காட்டினர். இவர்களில் 10 இற்கு மூவர் என்ற வகையிலேயே உடற்பயிற்சி செய்கின்றனராம்.

இதில் வேடிக்கை என்வென்றால் ஆண்கள் அநேகமானோர் தமது பெருத்த உடல்பற்றிக் கவலைப்படாது **'Jolly fat men'** என்றரீதியில் கருத்துத்தெரிவிக்கின்றனராம்.

# மிகப்புராதன சிலை மொரோக்கோவில் மீட்பு

உலகின் மிகப்புராதன மனிதனால் வடிக்கப்பட்ட சிலை எனக் கருதப்படும் ஒரு கல்லிலான உருவம் - மொரோக் கோவில், நிலத்தின் கீழிருந்து மீட்கப்பட்டுள்ளது. இது 400,000 வருடங்கள் பழமையானது எனக் கருதப்படுகிறது.

ஆறு சென்ரி மீற்றர் நீளமான இச்சிலை மனித உருவத்தை ஒத்ததாக இருக்கின்றது. வர்ணம் பூசப்பட்டிருக்கலாம் என்று கருதக்கூடிய வகையில் இதில் சிவப்புப் படிவுகள் காணப்படுகின்றன. ஆற்றங்கரை ஒன்றினருகே நிலத்துக்கு 15 மீற்றர் கீழிருந்து இது மீட்கப்பட்டுள்ளது.





இது **Acheulian** காலப்பகுதியில் வாழ்ந்த மனித மூதாதைகளால் வடிக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

# எவரெஸ்ட் அடிவாரத்தில் குவியும் மலையேறிகள்

எவரெஸ்டில் முதன் முதலாக மனிதன் ஏறிய 50 ஆவது ஆண்டைக் குறிக்கும் வகையில், அதில் ஏறுவதற்காக ஏரா ளமானோர் கியூவில் மலையடி வாரத்தில் காத்திருக்கினறனர். தென்னடிவாரப்பகுதியில் சுமார் 150 மலை ஏறிகளும், அவர்களின் உதவியாளர்களும் காத்திருக்கினறனர்.



புதன் காலையில் எவரெஸ்டில் ஏறிய சீனக்குழு ஒன்று- சிகரத்திலிருந்து நேரடி ஒளிபரப்பை நடத்திவருகிறது. 1975 இல் எவரெஸ்டில் ஏறிய முதல் பெண்மணியான ஜங்கோரேபி ஒரு நேரத்தில் ஒன்றோ, இரண்டே குழுக்கள் தான் எவரெஸ்டில் ஏற அனுமதிக்கப்படும் - ஆனால் இப்போது இப்படி அதிகளவில் கூடியிருப்பது ஆபத்தானது என்கிறார். அனைவருக்கும் நேபாள அரசு அனுமதி அளித்திருக்கக்கூடாது என்கிறார் இவர். எவரெஸ்ட் பகுதியில் தற்போது கடும் பனிக்காற்றும் வீச ஆரம்பித்துள்ளது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணியது உடைத்து.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## அமைதிக்குப் பங்களிக்க...!

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தென்பகுதி மக்களுக்கென உதவிப் பொருட்களைக் கொண்டு சென்ற - விடுதலைப் புலிகளுக்கு, தெற்கில் அபரிமிதமான வரவேற்புக் கிடைத்ததாக - மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், அமைச்சருமான சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

உதவிப்பொருட்களை சிங்கள மக்களுக்கு விநியோகித்த விடுதலைப் புலிகளிடம் - அம்மக்கள், 'உதவிப்பொருட்களை நீங்கள் கொண்டுவந்து தரவேண்டுமென்பதில்லை. நீங்கள் வந்ததே பெரிய செய்தி' என உளப்பூர்வமாகக் கூறியிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் மனிதநேய உதவி, பாதிக்கப்பட்ட சிங்கள மக்களிடையே ஏற்படுத்தியிருக்கின்ற இந்த உணர்வலைகள் - விடுதலைப் புலிகள் பற்றி தெற்கில் ஊறிப்போயிருக்கும் பல்வேறு மாயைகளை ஓரளவுக்காவது தகர்க்க வைத்திருக்கின்றன என்றே கூறலாம்.

தெற்கிலுள்ள அரசியல்வாதிகளும், சிங்கள இனவாத சக்திகளும் - விடுதலைப் புலிகள் தொடர்பாகவும், தமிழர்களின் உரிமைப் போராட்டம் பற்றியும் உருவாக்கிவந்த தவறான கருத்துருவாக்கங்களின் உண்மைத் தன்மையை அறிய இன்றைய சமாதான நிலை - சிங்கள மக்களுக்கு ஒரு வாய்ப்பைத் தந்திருக்கின்றது.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையிலும் - அவர்களது போராட்டம் - தமிழர் மீதான இன ஒடுக்குமுறையின் நிர்ப்பந்தத்தாலேயே எழுந்தது, என்பதும், தமிழ்மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளை மேற்கொண்ட சிங்கள அரசாங்கங்கள் மற்றும் அரச படைகள் மீதே ஆயுதமேந்திப் போராடத் தலைப்பட்ட விடுதலைப் புலிகள் - சாதாரண சிங்கள மக்களுக்கு எவ்விதத்திலும் எதிரானவர்களல்லர் என்பதைப் பலமுறை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

இதனடிப்படையிலேயே - போர்க் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட படையினர் பலரும் விடுவிக்கப்பட்டு, சிங்கள மக்களுக்கான தமது நல்லெண்ணத்தை விடுதலைப் புலிகளின் தலைமை பலமுறையும் தெரியப்படுத்தியது.

விடுதலைப் புலிகளின் போராட்டம் நியாயபூர்வமானது என்பதைச் சிங்கள மக்கள் உணர்ந்து கொண்டுவிடாமல் தடுப்பதற்காக - விடுதலைப் புலிகளை மனிதநேயமற்ற பயங்கரவாதிகளாகவும்- விடுதலைப் போராட்டத்தை, முழு இலங்கையையுமே ஆக்கிரமிப்பதற்கான போராகவும் சிங்கள அரசியல்வாதிகள் திரிவுபடுத்தியே வந்தனர்.

இத்தகைய பொய்ப்பிரசாரங்களே, சாதாரண சிங்கள மக்களை மேலாதிக்கம் செய்த நிலையில்- விடுதலைப் புலிகளின் மனிதநேயச் செயற்பாடுகள், தமிழர் விடுதலைப் போராட்டம் பற்றியும், தமிழர்களுக்கான உரிமைகள் தொடர்பாகவும் - புதிய நோக்கை சிங்கள மக்களிடம் ஏற்படுத்தத் தொடங்கியிருப்பது வரவேற்கத்தக்க விடயமாகின்றது.

இலங்கைத் தீவில் அமைதியும் நிம்மதியுமான வாழ்வுக்கு - சிங்கள மக்கள், தாம் யாது செய்ய வேண்டுமென நியாயபூர்வமாகச் சிந்திக்கத் தலைப்படுவதற்கு - இந்த 'உண்மை புரிதல்' வழிவகுக்க முடியும்.

அத்துடன் -

தமிழர்களுக்கான உரிமைகளை, தன்னாட்சியை, சுயநிர்ணயத்தை உள்ளடக்கிய கௌரவமான அரசியல் தீர்வொன்றுக்கு சிங்கள மக்கள் தம்மைத் தயார்ப்படுத்தும் பட்சத்தில்,

சிங்கள அரசியல் தலைமைத்துவங்களின் சுயநலப்போக்கிற்கும், இனவாத நிலைப்பாடுகளுக்கும் பலியாகிவிடாமல் - அவற்றை நிராகரித்து - நீதியாகச் சிந்திக்கும் வேளையில்,

இரு இனங்களும் இந்தத் தீவில் - இணக்கப்பாட்டுடன் வாழமுடியும் என்பதை சிங்கள மக்கள் புரிந்துகொள்ள முயற்சிப்பார்களேயானால் -

அது - தற்போதைய சமாதான முயற்சிகளை நேரிய பாதைக்குக் கொண்டுசெலுத்தும் மாபெரும் சக்தியாகவே உருவாகும் என்பது தெளிவானது.

சிங்கள மக்களிடம் அத்தகையதொரு - அமைதிக்கான எழுச்சியை உருவாக்குவதற்கு, சிங்கள மக்களிடமுள்ள சமாதானத்தை நாடும் சக்திகள் தீவிரமாகச் செயற்படவேண்டிய நேரமும் இதுவேயாகும்.

# இலங்கை இராணுவத்தினரைவிட விடுதலைப் புலிகள் முன்னணியில்!

## பிரிட்டிஷ் ஜெனரல் மைக்கல் ரோஸ் கருத்து!

(கொழும்பு)

பல விடயங்களில் புலிகள் இராணுவத்தினரைவிட முன்னிலைச் செயற்பாடுகளைக் கொண்டிருப்பதாகவும், இதற்கு புத்திசாதுரியம், தந்திரோபாய நடவடிக்கைகளில் இராணுவத்தில் காணப்படும் பற்றாக்குறை, பாதுகாப்புத் தவறுகள், நிர்வாகச்சீர்கேடுகள், போதிய உபகரணங்கள் இன்மை போன்றனவே காரணம் என்று முன்னாள் பிரித்தானிய இராணுவ அதிகாரியான ஜெனரல் மைக்கல் ரோஸ் தெரிவித்துள்ளார்.

அரச படைகளின் தொழிற்திறனை அதிகரிப்பது தொடர்பான ஆலோசனைகளைப் பெறுவதற்காக அரசாங்கத்தினால் அழைக்கப்பட்ட ஜெனரல் மைக்கல் ரோஸ் தனது சிபாரிசுகளிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

சமாதான முயற்சிகளில் ஐரோப்பிய யூனியனின் உதவியை இலங்கை பெற்றுக்கொள்ளலாம். அமைதியை முன்னெடுக்க நடுநிலையான சர்வதேச அமைப்பின் உதவி இலங்கைக்கு தேவைப்படுகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பான புகார்கள், மீறல்கள் பற்றிய விடயங்களைக் கவனிக்க இத்தகைய அமைப்புத் தேவை. ஸ்கன்டினேவிய போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினால் அவ்வளவு செயலாற்றுகையுடன் செயற்படமுடியாது. ஐரோப்பிய யூனியன் இந்த விடயத்தில் உதவலாம்.

இதேவேளை, புலிகளின் பொலிஸ்படைக்கு, சர்வதேச பொலிஸ் மூலம் பயிற்சிகளை வழங்கலாம். வட-கிழக்கு மற்றும் தென்பகுதிப் படையினருக்கு இடையில் ஆங்கிலத்தைத் தொடர்பு மொழியாகப் பயன்படுத்தலாம். இதற்குப் பிரிட்டனின் உதவியும் கிடைக்கும்.

இராணுவத்தின் மத்திய மற்றும் கனிஷ்ட நிலையினர் மத்தியில் நம்பிக்கையீனம் அதிகரித்துள்ளது. இதற்கு உயர் படைத்தளபதிகளின் தலைமைத்துவம் காரணமாகும்.

இதற்காக இராணுவத்தின் அடிப்படைக் கட்டுமாணங்களில் மாற்றங்களைச் செய்யவேண்டும். படைச்செயற்பாடுகள், பயிற்சிகள், நடைமுறைகள், தனிப்பட்ட நிர்வாகம், தேவைப்படும் உபகரணங்கள் எல்லாவற்றையும் குறித்து இந்த அடிப்படைக் கட்டமைப்பு மாற்றத்தின்போது கவனத்தில் எடுக்க வேண்டும் என்றும் ஜெனரல் மைக்கல் ரோஸ் தனது சிபார்சுகளில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனரல் மைக்கல் ரோஸ் - பிரிட்டனின் எஸ்.ஐ.எஸ் வான் சேவைப் பிரிவு அதிகாரியாக இருந்ததுடன், பொஸ்னியாவில் ஐ.நா அமைதிப்படைகளின் தளபதியாகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வீடமைப்புத் திட்டத்தில் எவரும் புறக்கணிக்கப்படவில்லை!

## அமைச்சரின் கூற்றுக்கு கியுடெக் மறுப்பு

இந்துகலாசார அமைச்சர் யாழ்.நகரில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசியபோது - அல்லைப்பிட்டியில் மீள்குடியேற்ற உதவித்திட்டத்தில் பிரான்ஸ் நாட்டு நிறுவனத்தின் உதவியோடு 100 வீடுகள் ஒதுக்கப்பட்டதில் - ஒரு வீடுகூட இந்துக் குடும்பத்துக்கு வழங்கப்படவில்லையெனத் தெரிவித்ததாக வெளியான செய்திகளுக்கு- கியுடெக் நிறுவனம் மறுப்பு வெளியிட்டுள்ளது.

இது தொடர்பான அறிக்கையில் கியுடெக் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உலகில் 198 நாடுகளில் இயங்கும் கரித்தாஸ் நிறுவனம் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பின் பிரான்ஸ் அரசின் வீடமைக்கும் திட்டத்தைப் பிரான்ஸ் கத்தோலிக்க உதவி நிறுவனத்தினூடாக, இலங்கை கரித்தாஸ் செடேக் நிறுவனம் பெற்று - எமது கியுடெக் நிறுவனத்தின் மூலம் மீள் குடியேற்றப்பணிகளை ஆரம்பித்தது. இவை பல்வேறு கிராமங்களில், குறிப்பாகத் தீவகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினை வெளிநாட்டவரான எம்.ஜேன் வைவெஸ் டுபோட் இணைப்பாளராகவும், எம்.மத்தியாஸ் வின்சன்ற் ஊக்குவிப்பாளராகவும் இருந்து செயற்படுத்தி வருகின்றார்கள்.

அல்லைப்பிட்டிக் கிராமத்தில் 105 தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டு வருகிறது. இதில் 40 வீடுகள் இந்துக் குடும்பங்களுக்கே வழங்கப்பட்டுள்ளது. மண்டைதீவில் 10 வீடுகள் இந்துக்களுக்கும், மண்கும்பானில் 35 வீடுகள் முழுவதும் இந்துக்களுக்கும், வேலணையில் 35 வீடுகளில் 20 வீடுகள் இந்துக்களுக்கும், சாட்டியில் 37 வீடுகளில் 32 வீடுகள் இந்துக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. முழுவதுமாக 232 வீடுகளில் 137 வீடுகள் இந்துக்களுக்கு ஒதுக்கப்பட்டு எந்த வேறுபாடுமின்றி பாமரமக்களுக்கு வழங்கப்பட்டதை அவ்வூர் மக்களே சான்றுபகர்வர் என்றும் கியுடெக் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மீட்பு, நிவாரணப் பணிகளுக்கு வந்த

# இந்தியக் கடற்படைக் கப்பல் இன்று நாடு திரும்புகிறது

(கொழும்பு)

நாட்டின் தென்பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண் சரிவு அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு வந்த இந்தியக் கடற்படைக் கப்பல் இன்று நாடு திரும்புகிறது.

காலி துறைமுகத்திலிருந்து 'சாரதா' என்ற இந்தக் கப்பல் இந்தியாவுக்குப் பயணமாகவுள்ளது. இந்தக் கப்பலில், சுழியோடிகள் உட்பட 200 வரையான மீட்புப் படையினர் இலங்கை வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருமலைத் துறைமுகத்திலும் உர இறக்குமதிக்கு ஏற்பாடு

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உர வகைகளை, திருகோணமலைத் துறைமுகத்தில் இறக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாகத் தெரியவருகிறது.

இதுவரை காலமும் கொழும்புத் துறைமுகத்திலேயே விவசாயத் தேவைகளுக்கான உரம் இறக்கப்பட்டது. ஆனால், எதிர்காலத்தில் திருகோணமலைத் துறைமுகத்திலும் உரத்தை இறக்குவதற்கு ஏற்றவகையில் அஷ்ரப் இறங்குதுறை தரம் உயர்த்தப்பட்டு வருகிறது.

பொலனறுவை, அனுராதபுரம், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை விவசாயிகளின் நன்மை கருதியே- திருகோணமலைத் துறைமுகத்தில் உரத்தை இறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அனர்த்தப்பகுதி உதவி அரச அதிபர்களாக இராணுவ அதிகாரிகளை அரசு நியமனம்!

முப்படைகளையும் சேர்ந்த உயரதிகாரிகளை அரசாங்கம்- வெள்ளம் பாதித்த பகுதிகளில் உதவி அரச அதிபர்களாக நியமித்துள்ளது.

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண விநியோகப் பணிகளை ஊழலற்ற வகையில் நடைமுறைப்படுத்தவே அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

குறிப்பிட்ட பிரதேசங்களில் உள்ள இராணுவ அதிகாரிகளே- அந்தப் பகுதிகளில் உதவி அரச அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், வெள்ளப் பாதிப்புக்குள்ளான பகுதி மக்களுக்கான உணவு விநியோகப் பணிகள் இராணுவத்தினரின் பாதுகாப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதேவேளை, பொதுமக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களைச் சமைப்பதற்குப் பாடசாலைகள், தேவாலயங்கள், கோயில்கள், விகாரைகளைப் பயன்படுத்துமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் றியன்சி பெரேரா தெரிவித்துள்ளார்.

வெள்ள நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள படையதிகாரிகள் உடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில், பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகையில் தொடர்பாடல் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அனர்த்தப்பகுதியில் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளப் படையினருக்குப் பொறுப்பாக மேஜர் ஜெனரல் கே.பி. எகொடவெல நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை விமானப்படையின் பதினொரு ஹெலிகொப்ரர்கள் நிலச்சரிவு அபாயமுள்ள பகுதிகளில் ஏற்படக்கூடிய அனர்த்தங்களில் இருந்து பொதுமக்களைக் காக்கும் வகையில் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

திடீர் மண் சரிவுகள் ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாகவே விமானப்படை எம்.ஐ.17, பெல் 212 ஆகிய ஹெலிகள் உட்பட 11 விமானங்கள் - களுத்துறை, கொக்கல, இரத்தினபுரி ஆகிய இடங்களில் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக விமானப்படையின் பேச்சாளர் குறூப் கப்டன் அஜித் விஜேசுந்தர தெரிவித்தார்.

காலி மாவட்டத்தில் வெள்ள நிவாரணப் பணிகளில் ஈடுபடுவதற்காகக் கடற்படையின் 18 அணிகள் பூஸாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இங்கு 29 படகுகள் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

இரத்தினபுரி மாவட்டத்தில் சில பகுதிகள் இன்னமும் வெள்ளத்தினால் துண்டிக்கப்பட்ட நிலையிலேயே இருந்து வருகின்றன. சில கிராமங்களுக்கு இன்னமும் மீட்பு அணிகள் செய்யமுடியாதிருப்பதாக குருவிட்ட இராணுவ பிரிகேட் தளபதியான கேணல் எஸ்.மார்க் தெரிவித்தார்.

# ஜெனரல் நம்பியாரின் ஆலோசனைகள் இராணுவத்துக்குத் தேவையானதுதானா?

**"இராணுவத்துக்கு யுத்தம் தொடர்பாக ஆலோசனைகளைக் கூறும் விடுதலைப் புலிகள" என்ற தலைப்பில் திவயின வார இதழின் 18 ஆம் திகதிய பதிப்பில் கீர்த்தி வர்ணகுல சூரிய எழுதிய பாதுகாப்பு நிலவரம் தொடர்பான கட்டுரையில் சில பகுதிகள்.**

காகம் பகல்வேளையில் ஆந்தையைத் தோற்கடிக்கும். அதேபோல் அரசன் ஒருவனும் அவனுடைய எதிரியைத் தோற்கடிக்கத் தருணம் பார்த்திருப்பான்.

**(A Crow will over come an owl in the day time. So the king who would conquer his enemy must have a sutable time.)**

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இவ்வாறான ஒரு தருணத்தையே எதிர்பார்த்திருக்கிறார். 1995 ஆம் ஆண்டு படையினரிடம் இழந்த யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்ற அவர் தருணம் எதிர்பார்த்திருக்கிறார்.

இதற்காகவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊடாகவும், அரச சார்பற்ற அமைப்புகள் மூலமாகவும் அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றும் பணிகளை அவர் முன்னெடுத்து வருகிறார்.

இந்த நிலைப்பாட்டுக்கு இந்தியாவின் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி சதீஸ் நம்பியாரும் உதவ முன்வந்துள்ளார். நம்பியாரின் அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான முதல் அறிக்கை விமர்சனங்களுக்கு உள்ளானநிலையில், அவரின் இரண்டாவது அறிக்கை அரசாங்கப் படைகளை முற்றாக வெளியேற்றும் நோக்கத்தைக் கொண்டதாகும்.

யூகோஸ்லாவியாவில் அமைதி காப்புப் பணிகளில் பணியாற்றியவர் தான் இந்த சதீஸ் நம்பியார். மார்ஷல் டிட்டோவின் யூகோஸ்லாவிய ஆட்சியின்போது சேர்பியப் போராளிகளின் தாக்குதல்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு இந்த நம்பியாரிடம் வழங்கப்பட்டிருந்தது. அதே நேரம், இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவரான "ரைகேவ் ரெலெவ்சன்" கொசோவோ நாட்டில் சமாதானப் படையின் தளபதியாகச் செயற்பட்டவராவார்.

இவ்வாறு சேவை செய்த மேஜர் ஜெனரல் சதீஸ் நம்பியார்- இலங்கை இராணுவத்தின் மனநிலையை அறிந்துகொள்வதற்காகவே தனது இரண்டாவது அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார். ஆயுதப்படைகளின் தளபதிகள் அரசியல் நடவடிக்கைகளைக் கற்றுக்கொள்ள வேண்டுமெனவும் அவர் உபதேசம் செய்திருக்கிறார் **(Defence force commanders to be educated on political activities).** எனினும், தமிழீழ விடுதலைப் புலிகளின் கடத்தல் சம்பவங்கள் குறித்து அவர் எதனையும் தனது அறிக்கையில் குறிப்பிடவில்லை..

எனவே, நம்பியாரின் அறிக்கை தமிழீழ விடுதலைப் புலிகளின் கருத்துக்களை அங்கீகரிக்கும் வகையிலேயே அமைந்திருக்கிறது. நம்பியார் தனது இரண்டாவது அறிக்கையைத் தயாரிக்க முன்னர், தமிழீழ விடுதலைப் புலிகளின் நம்பகத்தன்மையை - இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்தியாவின் சமாதானப் படைத்தளபதிகளான றொட்றிகஸ், சர்தேஸ் பாண்டே ஆகியோரிடம் ஆலோசனை பெற்றிருக்க வேண்டும்.

சதீஸ் நம்பியார் யூகோஸிலாவியாவில் பணியாற்றியபோது, போராளிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு சேர்பிய அரசால் அவர்மீது சுமத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை - இஸ்ரேலும், பலஸ்தீனமும் பல வருடங்களாகப் போரிடுகின்ற போதும், தமது எல்லைகள் தொடர்பாக வேறொரு நாட்டின் ஆலோசகர் எவரையும் அழைத்து ஆலோசனை பெறவில்லை.

இந்திய நாட்டுக்கும், சீன நாட்டுக்கும் இடையில் அகாசி சீன், பாராகூத், சிக்கீம், திபெத், அருஞ்சால் போன்ற இடங்களில் எல்லை முறுகல்கள் நிலவுகின்ற போதிலும், அந்த நாடுகளும் ஆலோசனைக்காக வேறொரு நாட்டவரை அழைக்கவில்லை. முதன்முறையாக இலங்கை மாத்திரமே இவ்வாறு செயற்பட்டிருக்கிறது.

இதேவேளை, நம்பியார் அதியுச்சப் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்திடம் அறிக்கை சமர்ப்பித்த பின்னர், புது டெல்கியில் கருத்துத் தெரிவிக்கும்போது - இந்த விடயத்தில் மீண்டும் தலையிடமாட்டேன் எனவும், தனக்கு ஏற்பட்ட அவமானம் இந்திய நாட்டுக்கேற்பட்ட அவமானம் எனவும் குறிப்பிட்டுள்ளார். இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்சிங்கும் - நம்பியார் தமது நாட்டுப் பிரதிநிதி அல்ல எனவும், அவர் தனிப்பட்ட ரீதியிலேயே இலங்கை விடயத்தில் செயற்பட்டார் எனவும் கூறியுள்ளார்.



**ஆலோசனை வழங்க வந்திருந்த - ஜெனரல் நம்பியார், வைஸ் அட்மிரல் பி.ஜே.ஜேக்கப் ஆகியோருடன் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன செய்தியாளர் மாநாட்டில்.**

இந்நிலையில், லண்டனில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிங்கள "சந்தேசிய" சேவையைச் சேர்ந்த ஒருவர், இராணுவத்தினரால் பொதுமக்களின் வீடுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இவர் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளால்- வடக்கில் தமிழர்களின் வீடுகள் கைப்பற்றப்பட்டமையை ஏன் அறிந்திருக்கவில்லை?

இவர் ஒரு தேசத்துரோகி என்றாலும், இவரின் கருத்தைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் இணையத்தளம் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருந்தது.

இது இவ்வாறிருக்க, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான சுவீடன் சீடா அரச சார்பற்ற அமைப்பின் நிதியுதவில் வெளிவரும் **"North Eastern Herald"** செய்தித்தாளில், பலாலியிலிருந்து படையினர் தற்காலிகமாகவேனும் வெளியேறிவிடுவர் என்ற நம்பிக்கையைத் தமிழ் அரசியல்வாதிகள் கொண்டிருக்கும் செய்தி ஒன்றும் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**தமிழில் - இந்திரஜித்.**

# உளவியல், பாலியல் விழிப்புணர்வூட்ட நெடுந்தீவில் பயிற்சிப் பட்டறைகள்!



**செய்திக் கட்டுரை**

யாழ்.பெருநிலப்பரப்பிலிருந்து பல மைல் தொலைவில், அலைகடல் சூழவுள்ள நெடுந்தீவிலுள்ள மக்கள் தங்களது சகல தேவைகளுக்கும் வெளியிடங்களையே நாடவேண்டிய நிலையுள்ளது.

இந்தவகையில் - உளவியல் தாகங்கள் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் "சாந்திகம்" உளவளத்துணை நிலையத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் பயிற்சிப் பட்டறைகள் நெடுந்தீவைப் பொறுத்தவரையில் முக்கியமானதொரு விடயமாகும்.

இதுவரைக்கும் நான்கு தடவைகள் நெடுந்தீவில் நடத்தப்பட்ட பயிற்சிப் பட்டறைகள் மூலம் 30 இளைஞர், யுவதிகளுக்கு உளவியல் மற்றும் பாலியல் தொடர்பான பயிற்சி வகுப்புக்களை வழங்கி, அவர்கள் மூலமாகத் தீவிலுள்ள ஏனையவர்களுக்கும் சென்றடையச் செய்யுமொரு செயற்பாடு சாந்திகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. **"Core Group"** என்ற பெயரில் இந்த 30 பேர் கொண்ட குழுவினர் செயற்படுகின்றனர்.


இக்குழுவிற்கென தலைவர், செயலாளர், பொருளாளர் என ஒரு நிர்வாகம் அமைக்கப்பட்டு, இச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது. சாந்திகம் நிறுவனத்தினரின் உயரிய நோக்கம் இந்த முப்பது பேரிடமும் மட்டுமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே, இவர்கள் தமது ஆக்கபூர்வமான பணிகளைத் தீவிலே மேற்கொண்டு, மக்கள் மத்தியில் நிலவும் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான நிலைமைகளை விளக்கிச் சமூகத்தில் மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும்.

சாந்திகம் உளவளத்துணையினர் முதலில் சாதாரணமாகப் பயிற்சிப் பட்டறையை நடத்துவதை மட்டுமே இலக்காகக் கொண்டிருந்தனர். ஆனால், இந்தக் குழுவினர் மூலம் தான் இங்கு பாலியல் ரீதியிலான பிரச்சினைகள அதிகம் உள்ளதாக அறிந்து, மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இப்பயிற்சிப் பட்டறையினைத் தொடர்ந்து நடாததி வருவதாகத் தெரிவித்தனர்.

இவ்வாறாக நடாத்தப்பட்டுவரும் பயிற்சிப் பட்டறையில் நான்காவது கட்டப் பயிற்சிகள் - கடந்த 3 ஆம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதி வரை நடைபெற்றது. இம்முறை யுனிசெப் நிறுவன ஆதரவுடன் பட்டறையை சாந்திகத்தினர் நடாத்தினர்.

இப்பயிற்சி வகுப்பிலே பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாகக் கொழும்பைச் சேர்ந்த பாலியல் துறைசார்ந்த வள அறிஞர் றுசியா சமரசேகர கலந்துகொண்டு விசேடமான கருத்துரைகளை வழங்கினார். இவ்வாறான ஒரு கருத்தரங்கில், நெடுந்தீவில் தான் முதன்முதலாகத் துறைசார் நிபுணரை அழைத்து விளக்கமளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



**பயிற்சியாளர் ஒருவருக்கு பேராசிரியர் தயா சோமசுந்தரம் நிகழ்வில் வைத்து சான்றிதழை வழங்குகின்றார்.**

இறுதி நாளான இம்மாதம் 6 ஆம் திகதி அன்று பயிற்சிபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்விலே யாழ்.பல்கலைக்கழக உளநலத்துறைத் தலைவர் பேராசிரியர் தயா சோமசுந்தரம், யுனிசெப் நிறுவன யாழ்ப்பாணத் திட்ட அலுவலர் செலின் லகோவிறேற், சாந்திகம் நிறுவன இயக்குநர் சந்திரசேகர சர்மா மற்றும் உள்ளூர் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்வுக்கு வந்த யுனிசெப் நிறுவனத் திட்ட அலுவலர் -

நெடுந் தீவிலுள்ள பாடசாலைகள், வைத்தியசாலைகளைப் பார்வையிட்டதுடன், இங்குள்ள பிரமுகர்களையும் சந்தித்துச் சென்றுள்ளதுடன், இங்கு காணபபடும் குறைபாடுகளை நிவர்த்திக்க, தான் உரிய நடவடிக்கைகள் செய்வதாக உறுதியளித்துச் சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



**பயிற்சி பெற்ற குழுவினர்**

**கண்ணன்**

# சின்னஞ்சிறு செய்திகள்

### மலர் வெளியீடும் நூலகத் திறப்பு விழாவும்

புதிய உயர் கல்லூரியின் யாழ்ப்பாணம், பேராதனை பல்கலைக்கழகங்களின் வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் 'கலா தரிசனம்' மலர் வெளியீட்டு விழாவும், நூலகத் திறப்புவிழாவும் யாழ்ப்பாணம், ஆரிய குளத்திலுள்ள புதிய உயர் கல்லூரியில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியத் தலைவர் கு.றஜீவன் தலைமையில் இடம்பெறும். பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் கலந்துகொள்வார்.

### மின்சார விநியோகம் தடை

மீசாலைப்பகுதிக்குக் கடந்த சில தினங்களாக மின்சாரம் வழங்கப்படவில்லை. மீசாலை வாகையடி மின் பிறப்பாக்கி பழுதடைந்தமையினாலேயே மின்சாரம் வழங்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது.

இந்த மின் பிறப்பாக்கி அவ்வப்போது பழுதடைவது குறிப்பிடத்தக்கது.

### சாவகச்சேரி சந்தையில் பலாப்பழங்கள

பலாப்பழக்காலம் ஆரம்பித்துள்ளதையடுத்துச் சாவகச்சேரிச் சந்தைக்குத் தினமும் பெருமளவு பலாப்பழங்கள் விற்பனைக்காகக் கொண்டுவரப்படுகின்றன.

தென்னிலங்கையில் இருந்து வரும் சுற்றுலாப்பயணிகள்,. பலாப்பழத்தைக் கொள்வனவு செய்வதற்காக அதிகளவில் சாவகச்சேரிச் சந்தையை நாடுவதாகவும் தெரிய வருகின்றது.

### சைக்கிள் திருட்டு

புலோலி தெற்கில் வீட்டிற்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்று நேற்று முன்தினம் திருடப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. (17)

# துருக்கிய விமான விபத்தில் 62 ஸ்பானிய படையினர் பலி!



நொருங்கிய விமானம்.

துருக்கியில் நடந்த விமான விபத்தில், ஆப்கானிஸ்தானிலிருந்து திரும்பிக்கொண்டிருந்த 62 ஸ்பானிய அமைதிகாப்புப் படையினர் பலியாகினர். உக்ரேயின் விமான சேவைக்குச் சொந்தமான யாக்-42 ரக விமானம், நேற்று மலையுடன் மோதியதில் இந்த அனர்த்தம் ஏற்பட்டது. பனிப்புகார் அதிகம் இருந்ததால், விமானி விமானத்தைக் கீழே பதிக்கமுயன்றபோதே, விமானம் மலையுடன் மோதியது.

விமானத்தின் சிதைவுகள் மலை அடிவாரம் எங்கும் சிதறிக்காணப்படுகின்றன. இதுவரை 25 சடலங்கள் துருக்கியப் படைகளால் மீட்கப்பட்டுள்ளது. ஆப்கானில்-நான்கு மாதகாலம் அமைதிகாப்புப் பணியைப் புரிந்துவிட்டுத் திரும்பிய படையினரே பலியானதாக, ஸ்பெயின் பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது. விமானத்தில் 40 ஸ்பானியப் படையினர், 21 விமானப் படையினர், ஒரு சிவிலியன் பாதுகாப்புப் பணியாளர் ஆகியோருடன் 12 விமான சிப்பந்திகளும் இருந்துள்ளனர். கடும் பனிப்புகார் மத்தியில், விமானத்தைப் பதிக்க விமானி மூன்று தடவை முயற்சித்ததாகவும், மூன்றாவது தடவை பதித்தபோதே அது மலையுடன் மோதியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இறுதியாக விமானி தகவல் தெரிவிக்கையில், 10 மீற்றருக்கப்பால், பனிப்புகார் காரணமாக தனக்கு எதுவும் தெரியவில்லை எனக்கூறியுள்ளார்.


உக்ரேனின் 'மெடிட்ரேனியன் எயர்வேஸ்' விமான சேவைக்குச் சொந்தமான இந்த யாக்-42 ரக விமானத்தை, ஸ்பானிய பாதுகாப்பு அமைச்சு வாடகைக்கு அமர்த்தியிருந்தது.

ஆப்கானிஸ்தானில் அமைதிப் பணிக்கென ஸ்பெயின் 120 அமைதிப்படையினரை அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் கடும் வெப்பம் காரணமாக பிளந்துபோயிருக்கும் நிலத்தில் இந்தச் சிறுவர்கள் விளையாடி மகிழ்கின்றனர்.

# காஷ்மீர் தாக்குதலில் மேலும் 9 பேர் பலி!



காஷ்மீரில் - முஸ்லிம் போராளிகள் நடத்திய தாக்குதலில், ரஜூரி மாவட்டத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். பூஞ் மாவட்டத்தில் நடத்த மற்றுமோர் தாக்குதலில் - மூன்று போராளிகளும், பொலிஸார் ஒருவரும் இறந்தனர்.

இந்த முஸ்லிம் குடும்பம் - பாகிஸ்தான் எல்லையருகே வசித்துவந்ததாகவும், இந்தக் குடும்பம் ஏன் இலக்கு வைக்கப்பட்டது என்பது தெரியவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். மற்றைய சம்பவத்தில், சந்தேகத்திற்கிடமான போராளிகளின் மறைவிடம் ஒன்றைப் பொலிஸார் சுற்றிவளைத்தபோது, மோதல் வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுரான்கோட்டி மலைப்பகுதியில் கடந்தவாரம் தாம் மேற்கொண்ட ஒபரேஷன் 'சார்ப் வினாஷ்' (பாம்புகளை ஒழித்தல்) என்ற இராணுவ நடவடிக்கையில், 60 போராளிகள் கொல்லப்பட்டதாக இந்திய இராணுவம் தெரிவித்துள்ளது.

## வளைகுடாப் போரில்

# பிரிட்டிஷ் விமானப்படையின் செயற்பாட்டுக்குக் கண்டனம்!

ஈராக் போரின்போது, பிரிட்டிஷ் விமானப்படை செயற்பட்ட விதம் குறித்து, பெரும் கண்டனத்தை பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் கன்சர்வேட்டிவ் கட்சி எழுப்பியுள்ளது.

விமானப்படையின் சரியான ஒத்துழைப்பு போர்க்களத்தில் கிடைக்காமையினால், தாம் பெருத்த உயிர் அச்சுறுத்தலை எதிர்கொண்டதாகப் பிரிட்டிஷ் தரைப் படையினர் குற்றஞ்சாட்டியுள்ளனர். அமெரிக்கப் படைகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதே தமது முதலாவது பணி என்ற வகையில் - பிரிட்டிஷ் விமானப்படை செயற்பட்டதாக, பிரிட்டிஷ் நிழல் பாதுகாப்புச் செயலர் பேர்னாட் ஜென்கின் தெரிவிக்கின்றார்.

முன்னேறும் தரைப்படைக்கு நெருங்கிய ஆகாயப் பாதுகாப்பு அவசியம். எதிரேயுள்ள எதிரி நிலைகளை நிலைகுலைக்க, இந்த விமானப்படைகளின் ஆதரவு தேவை. ஆனால் - பிரிட்டிஷ் தரைப்படைகள், அழைப்பு விடுத்து விமானப்படையின் உதவிக்காக 48 மணிநேரம் காத்திருக்க வேண்டியிருந்ததாக வளைகுடாவிலிருந்து அண்மையில் திரும்பிய ஜென்கின் சுட்டிக்காட்டினார். பிரிட்டிஷ் விமானங்கள் - ஈராக் போரின்போது, அமெரிக்கக் கட்டுப்பாட்டிலேயே இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கப் படைகள் - பிரிட்டிஷ் படைகளை இரண்டாவது தரப்பாகவே கருதின. பிரிட்டிஷ் விமானப்படையின் முதல் ஆதரவு பிரிட்டிஷ் படைகளுக்காகவே இருந்திருக்கவேண்டும். இதை பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சும் இன்னும் மறுக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.



ஆனால், பிரிட்டிஷ் விமானப்படை அதிகாரிகள் இதை மறுத்துள்ளனர். தாம் அமெரிக்கப் படைகளையும், பிரிட்டிஷ் படைகளையும் ஒன்றாகக் கருதியே உதவினோம் என அவர்கள் கூறுகின்றனர்.

# பிலிப்பைன்ஸ் படகு விபத்து; விசாரணைக்கு உத்தரவு!

பிலிப்பைன்சில் - கடந்த ஞாயிறு நடந்த படகு விபத்தில், 25 பேர் பலியான சம்பவம் குறித்து, விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி குளோரியா அரோயா உத்தரவிட்டுள்ளார். ஒரு வாரத்தினுள் அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் அவர் கேட்டுள்ளார்.

மணிலா வளைகுடாவிலுள்ள தீவு ஒன்றின் அருகே, காலநிலை மோசமாகக் காணப்பட்டதால், இரு பயணிகள் படகுகள் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது. பயணிகள் சேவையில் ஈடுபடும் படகின் நிலை குறித்து - நன்கு ஆராய்ந்த பின்பே அவற்றுக்கான அனுமதியை வழங்க வேண்டும் என, கடற் பயணங்கள் தொடர்பான அதிகாரிகளுக்கு ஜனாதிபதி குளோரியா பணிப்புரை விடுத்துள்ளார்.

இப்படகுகளில் 192 பயணிகள் இருந்துள்ளனர். இவர்களில் 36 பேர், பதிவுகளின்றி படகுகளில் ஏறியிருந்தனர் என அதிகாரிகள் கூறுகின்றனர்.


உலகவலம்

# அமெரிக்க மாணவர்களின் கொலையை மையமாகக் கொண்ட படத்துக்கு விருது!

1999 இல், அமெரிக்கப் பாடசாலைகளில் மாணவர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களை மையமாக வைத்துத் தயாரிக்கப்பட்ட **Elephant** (யானை) என்ற திரைப்படத்திற்கு, பிரான்ஸ் கானேஸ் திரைப்பட விழாவில் 'பால்ம்டோர்' எனும் உயர் விருது கிடைத்துள்ளது. கஸவான் சான்ட் என்பவர் இப்படத்தை இயக்கி, சிறந்த இயக்குநருக்கான விருதைப் பெற்றுள்ளார்.

இந்தத் திரைப்படத்தில் சினிமா நடிகர்கள் எவருமில்லாது, கல்லூரி மாணவ - மாணவிகளே வேடங்களை ஏற்று நடித்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்த இயக்குநர் - அமெரிக்காவில் வதியும் பிரான்ஸ் நாட்டவராவார். விருது கிடைத்துள்ளதையிட்டு தாம் மகிழ்வும் பெருமையும் கொள்வதாக அவர் கூறினார்.

# நோர்வே கப்பலில் தீ விபத்து; நான்கு சிப்பந்திகள் மரணம்!




(ஒஸ்லோ)

அமெரிக்காவின் மியாமி துறைமுகத்தில் தரித்து நின்ற, நோர்வே நாட்டுக்குச் சொந்தமான பயணிகள் கப்பல் ஒன்றில், ஞாயிறு அதிகாலை ஏற்பட்ட தீயினால், நான்கு கப்பல் சிப்பந்திகள் பலியாகினர். மேலும் 20 பேர் காயமடைந்தனர். பலியான நால்வரும் திடீர் வெடிப்பினால் கடலில் தூக்கிவீசப்பட்டதாகக் கூறப்படுகிறது.

'எஸ்.எஸ்.நோர்வே' எனும் இக்கப்பலின் கொதிகலன் அறையில் ஏற்பட்ட நீராவி ஒழுக்கினால், தீ ஏற்பட்டதாக அமெரிக்கக் கரையோரக் காவற்படையினர் தெரிவித்தனர். நோர்வே கப்பல்சேவைக்குச் சொந்தமான இக்கப்பலில்- விபத்து ஏற்பட்டதைத் தொடர்ந்து, கப்பலிலிருந்த இரண்டாயிரம் பயணிகளும் உடனடியாகவே இறக்கப்பட்டனர். காயமடைந்த கப்பல் சிப்பந்திகளில், எட்டுப்பேரின் நிலை மோசமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1960 களில் கட்டப்பட்ட, 313 மீட்டர் நீளமான இக்கப்பல் - அக்காலப்பகுதியில், உலகின் நீண்ட பயணிகள் கப்பலாகக் கருதப்பட்டது. 1970 களிலேயே இதைவிட நீண்ட கப்பலான 'எலிசபெத்' சேவைக்கு விடப்பட்டது.



காஷ்மீரில் - இஸ்லாமிய ஷரியத் அமைப்பினரின் போராட்டத்தில் தடியடி நடத்துகின்றனர் மாநிலப் பொலிஸார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பாதுகாப்பு வலயத்தை நீக்கக்கோரி மாணவர் பேரணி நடத்த ஏற்பாடு

இலங்கை அரசு, போர்நிறுத்த உடன்படிக்கையை முழுமையாக அமுல்படுத்தவேண்டும் எனக் கோரி, ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்த, யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

நேற்றுப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஒன்றியக்கூட்டத்தில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.

உயர்பாதுகாப்பு வலயங்களை நீக்குமாறும், மக்கள் மீளக்குடியமர வசதிசெய்யுமாறும் கோரி - இந்தப் பேரணியை நடத்த முடிவு செய்யப்பட்டது. அடுத்த மாத நடுப்பகுதியில் இப்பேரணியை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## தேசிய விளையாட்டு விழாவுக்காக

# துரையப்பா அரங்கிற்கு பல லட்சம் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள தேசிய விளையாட்டு விழாவிற்காக, துரையப்பா விளையாட்டரங்கினை நவீன முறையில் புனரமைக்க, 115 இலட்சம் ரூபா நிதியை விளையாட்டமைச்சு ஒதுக்கியுள்ளது.

துரையப்பா விளையாட்டரங்கை புனரமைப்பதற்கான பொறுப்பு, யாழ். மாநகரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, துரையப்பா விளையாட்டரங்கைச் சுற்றி எல்லைவேலி அமைத்தல், நிலத்தின் கீழ் நீரைத்தேக்கி வைக்கும் தண்ணீர்த்தொட்டி அமைத்தல், புதிதாக ஓர் பார்வையாளர் அரங்கை அமைத்தல், ஓட்டப் போட்டிக்கான தடத்தை அமைத்தல் போன்ற வேலைகளைக் குறுகிய காலத்தில் மாநகரசபை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

ஆனால், இதுவரை இதற்கான பணிகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை. தேசிய விளையாட்டு விழா ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அமைச்சர் 'சந்தி மல்லி' கொலை அரசியல் பழிவாங்கலென தகவல்

## பூர்வாங்க விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

நேற்றுமுன்தினம் கொழும்பில், உயர்பாதுகாப்பு வலய எல்லையினுள் வைத்து, தென்மாகாண சபை அமைச்சர் 'சந்தி மல்லி' கொல்லப்பட்டமைக்கு, அரசியல் பழிவாங்கலே காரணம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த இவருக்கு, பல எதிரிகள் அரசியலில் உள்ளதாகவும் - இவர்கள் அமைச்சரைக் கொல்ல பல நாட்களாகக் காத்திருந்ததாகவும் - பூர்வாங்க விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# மிதிவெடிகள் அகற்றும் பணிகள் முடிந்த பின்பே மின் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை, செம்மணிப் பகுதிகளில், மிதிவெடி அகற்றும் பணிகள் பூர்த்தி செய்தவுடன் இப்பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படுமெனவும் மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்

## புனர்வாழ்வு - அபிவிருத்தி பணி மேற்கொள்ளும்

# அரச திணைக்களங்களுக்கு கணினி வசதி வழங்கப்படும்

(கொழும்பு)

வட - கிழக்கு புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைளுடன் தொடர்புடைய அனைத்து அரச திணைக்களங்களுக்கும், கணினி வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

மேற்படி வசதிகளை ஏற்படுத்துவதற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும், பிரதம மந்திரியின் அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது.

வட - கிழக்கில் இயங்கிவரும் பல அரச செயலகங்கள், இன்னமும் கணினி மயப்படுத்தப்படாமல் உள்ளன. அத்துடன், இவ்வலுவலகங்களுக்குத் தேவையான வாகன வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

மேற்படி வசதியீனங்களை நீக்குவதற்கு, வெளிநாட்டு நிதியுதவிகளைப் பயன்படுத்தி விசேட செயற்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

(க)

## வடமாகாண அலுவலகம் நாளை திறப்பு

இலங்கை வங்கியின் வடமாகாணக் காரியாலயம், நாளை காலை 9.30 மணிக்கு, யாழ். நகரில் திறந்து வைக்கப்படவிருக்கின்றது.

கடந்தகால யுத்த நடவடிக்கையினால் இந்த அலுவலகம் கொழும்பில் இயங்கிவந்தது. இதனால், யாழ். குடாநாட்டு வர்த்தகர்கள், பொதுமக்கள் இதனை யாழ்ப்பாணத்தில் இயக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து - இலங்கை வங்கியின் வடமாகாணக் காரியாலயம், இம்மாதம் 28 ஆம் திகதிமுதல் யாழ். நகரில் இயங்கவுள்ளது. இந்த வடமாகாணக் காரியாலயத்தின் உதவிப் பொதுமுகாமையாளராக, க.பாலசுப்ரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் எஸ்.என்.பளிஹேன; பிரதிப் பொது முகாமையாளர் பி.ஏ.சி. பெர்னாண்டோ ஆகியோர் இந்தக் காரியாலயத்தை திறந்துவைக்கவுள்ளனர்.

# விஸ்வா நினைவு சி.டி. நேற்று வெளியிடப்பட்டது!

மூத்த கலைஞரும், நாட்டுப்பற்றாளருமான அமரர் வி.ரி.ஏ.விஸ்வா நினைவாக, 'புலிகளின் குரல்' நடத்திய சிறப்பு முத்தமிழ்க் கலையரங்கம், நேற்றையதினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

'புலிகளின் குரல்' நிறுவன நிர்வாக இணைப்பாளர் இ.இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழீழத் தேசியக் கொடியினை - யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஏற்றிவைத்தார்.

பொதுச் சுடரினை - 'புலிகளின் குரல்' பிரதிப் பொறுப்பாளர் செயல்வீரன், போராளி தமிழ்க்கவி ஆகியோர் ஏற்றினர்.

தொடர்ந்து, மாவீரர் வணக்கத்தினை ஆனந்தஜோதி தர்சனன் குழுவினர் வழங்கினர். நினைவுரையினை - கலை பண்பாட்டுக்கழகத்தைச் சேர்ந்த புதுவை அன்பன், யாழ்.பல்கலைக் கழகப் பேராசிரியர் சிதம்பரநாதன், யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப்பொறுப்பாளர் கலைவிழி, 'புலிகளின் குரல்' நிறுவன பிரதம செய்தியாசிரியர் தவபாலன் ஆகியோர் நிகழ்த்தினர்.

'மூத்த கலைஞர் நாட்டுப்பற்றாளர் வி.ரி.ஏ.விஸ்வாவின் நினைவுகள்' என்னும் சி.டியை (இறுவட்டினை) பேராசிரியர் அ.சண்முகதாஸ் விஸ்வாவின் துணைவியாரிடம் வழங்கினார்.

இதைத் தொடர்ந்து, 'மண்ணும் மனிதமும்' என்னும் தலைப்பில், பல்கலைக்கழக மாணவிகளின் கவியரங்கமும், என்.எஸ்.மணியனின் நெறியாள்கையில் - முள்ளியவளை அ.த.க.பாடசாலை மாணவர்கள் வழங்கிய 'பண்டாரவன்னியன்' என்னும் நாட்டுக்கூத்தும் இடம்பெற்றது.

(சு)

# மன்னாரில் படையினர் பாவிக்கும் கட்டடங்களின் விபரங்கள் சேகரிப்பு

## இராணுவம், பொலிஸ், புலிகள் இணைந்து நடவடிக்கை

மன்னார் மாவட்டத்திலுள்ள இராணுவத்தினர், பொலிஸாரின் பாவனையிலுள்ள - அரச, தனியார் கட்டடங்கள் தொடர்பான விபரங்கள் நேற்றுச் சேகரிக்கப்பட்டன.

இராணுவத்தினரும், பொலிஸாரும், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் இந்தத் தகவல் சேகரிப்பில் ஈடுபட்டிருந்தனர். இவர்களுடன், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மாவட்டப் பிரதிநிதியும் சென்றிருந்தார்.

நேற்றையதினம் - தலைமன்னார் முதல் பள்ளிமுனை வரையான பகுதிகளிலுள்ள இராணுவ மற்றும் பொலிஸாரின் பாவனையிலுள்ள அரசாங்க, பொதுமக்களுடைய காணிகள், கட்டடங்கள், வர்த்தக ... சேகரித்தனர்.

இன்று - உயிலங்குளம், திருக்கேதீஸ்வரம், வங்காலை, முருங்கன் ஆகிய பகுதிகளில் விபரங்கள் சேகரிக்கப்படவுள்ளன.

நேற்றைய தினம் சேகரிக்கப்பட்ட விபரங்கள் உடனடியாக அறிகையாகத் தயாரிக்கப்பட்டு, மன்னார் அரச அதிபர் வி.விஸ்வலிங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

படையினர் தரப்பில் லெப்டினன்ட கேணல் ஜெயக்கொடி, பொலிஸ் தரப்பில் ஐ.பி.பிறேமசிறி, விடுதலைப் புலிகள் தரப்பில் மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் மூர்த்தி ஆகியோர் இப்பணியில் ஈடுபட்டனர்.

# நிதியைக் கையாள...

கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அரசின் ஆலோசனைப்படியான மேற்படி அமைப்பு, வட - கிழக்கில் மேற்கொள்ளப்படவிருக்கின்ற அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைளின்போது - தீர்மானங்

ஹெய்ம் பிரதமருடன் பேசும்போது - அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோரும் உடனிருந்தனர்.

அதன்பின்னர் - எரிக் சொல்ஹெய்ம் மீண்டும், அமைச்சர்களான ஜி. எல்.பீரிஸ் மற்றும் மிலிந்த மொற

(யாழ்ப்பாணம்)

அரியாலை, செம்மணிப் பகுதிகளில், மிதிவெடி அகற்றும் பணிகள் நடைபெற்று வருவதால், மீசாலை வரையிலான மின்வழங்கும் பணி ஸ்தம்பிதமடைந்துள்ளது.

தற்போது செம்மணியிலிருந்து மீசாலை வரையிலான பகுதிக்கு மின் இணைப்பு முடிவடைந்துள்ளது. ஆயினும், அரியாலை முதல் செம்மணி வரையிலான ஒரு கிலோ மீற்றர் பகுதிக்கு மிதிவெடி அகற்றும் பணி நடைபெற்று வருவதால், அப்பகுதியில் மின்கம்பங்களை நாட்டி, மின் வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்யமுடியாமலிருப்பதாகவும்,

மிதிவெடி அகற்றும் பணி முடிவடைந்தபின்பே, மின் இணைப்பு பூர்த்தி செய்தவுடன் இப்பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படுமெனவும் மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன், மீசாலை முதல் கொடிகாமம் வரையிலான பிரதேசத்திற்கு - மின்சாரசபையினர் மின் இணைப்புப் பணியினை மேற்கொள்வதற்கு - அப்பகுதிகளில் வீதிகளை அண்டியுள்ள தென்னை, பனை போன்ற மரங்கள் இடையூறாக உள்ளதால்,

அப்பகுதி மக்கள் இடையூறாகவுள்ள மரங்களை வெட்டி உதவினால், உடனடியாக மின் இணைப்பு வழங்கும் பணியினை ஆரம்பிக்கலாம் என மின்சாரசபையின் பிரதி முகாமையாளர் தெரிவித்தார். (ரா,சு)


என்றும் உங்களுக்காக : உங்கள் நம்பிக்கைக்குரிய நாம் உங்களுக்கென்றே திறம்பட வடிவமைக்கப்பட்ட பாடத்திட்டங்களுடன், எதிர்வரும் ஆனி மாத முதல் வாரத்தில் புதிய பிரிவுகளை ஆரம்பிக்க இருக்கிறோம்.

உங்கள் நம்பிக்கை ?.......

Diploma Courses :

Ms - Office.
Desktop Publishing.
Video Mixing.
Web designing.
Digital Photography.
Hardware Technology

Certificate Courses :

Ms - Word
Ms - Power point.
Ms - Front page
Adobe Page Maker
Adobe Photoshop
Internet & E - Mail
Ms - Excel.
Ms - Access
Adobe Go live.
Adobe Primmer.
Corel R.A.V.E.
Corel DRAW

GIT General Information Technology For A/L Students
அனைத்துப் பிரிவுகளும் ஆரம்பம் : 31.05.2003, 01.06.2003 - 3.30 & 03,04,05 - 06 - 2003 - 3.30

Special Offer to A/L 2003 Students & GIT Students

பதிவுகளுக்கு :
021 -222 3497
collegeofcom@bharatmail.com
CC Center for Computer Studies
Computer College
கணனிக் கல்லூரி
337, Kasthuriyar Road, Jaffna.


பகுதிகளிலுள்ள இராணுவ மற்றும் பொலிஸாரின் பாவனையிலுள்ள அரசாங்க, பொதுமக்களுடைய காணிகள், கட்டடங்கள், வர்த்தக நிலையங்கள் தொடர்பான விபரங்களை நேரில் சென்று இவர்கள்

## உதைபந்தாட்டப் போட்டி அறிவுறுத்தல் கூட்டம

அகில இலங்கை பாடசாலைகளின் உதைபந்தாட்டச் சங்கம் நடாத்தும் "சங்ஸ்தா" கிண்ணத்துக்கான, வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட, 15 வயதிற்குக் கீழான மாணவர்களுக்கான, உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிக்கான அறிவுறுத்தல் கூட்டமும், குழு ஒழுங்குத் தெரிவுக்குமான செயற்பாடும் நாளை புதன் கிழமை காலை 10 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. விண்ணப்பித்த பாடசாலைகளின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களைத் தவறாது கூடத்தில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## காவலாளியை...

அடித்து உடைத்துள்ளனர்.

இத்தாக்குதலால், இரத்தம் வெளியேறிய நிலையிலிருந்த பாதுகாவலர் - வீதியால் சென்றவர்களின் உதவியுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அண்மைக்காலமாக மதுபோதையில் செல்லும் இளைஞர் குழுவினர், இரவுக் கடமையில் ஈடுபடும் காவலாளிகளை மிரட்டுவதும், பொது மக்களுடன் சேஷ்டை புரிவதும் யாழ்.நகரில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரா)

மேற்படி அமைப்பு, வட - கிழக்கில் மேற்கொள்ளப்படவிருக்கின்ற அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைளின்போது - தீர்மானங்களை மேற்கொள்ளவும், அத்தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் தேவையான அதிகாரங்களைக் கொண்டிருக்கும் எனவும், இவ்வமைப்பு, அரசினதும் விடுதலைப் புலிகளினதும் தலைமையில் இயங்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இந்த அமைப்பு வட - கிழக்குப் பகுதிகளை எல்லாவகையிலும் முழுமையாக நிர்வகிக்கின்ற இடைக்கால நிர்வாகசபையாக அமையாது, தற்போதுள்ள அரசியல் அமைப்புக்குட்பட்ட ஒரு நிர்வாகக் கட்டமைப்பாகவே உருவாக்கப் படவுள்ளது.

மேற்படி நிர்வாகக்கட்டமைப்பு தொடர்பாக, நேற்று எரிக் சொல் உடனிருந்தனர்.

அதன்பின்னர் - எரிக் சொல்ஹெய்ம் மீண்டும், அமைச்சர்களான ஜி. எல்.பீரிஸ் மற்றும் மிலிந்த மொறகொட ஆகியோரைத் தனியாகச் சந்தித்துப் பேசினார்.

இன்றுகாலை, கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடலை மேற்கொள்ளவிருக்கும் எரிக் சொல்ஹெய்ம், உடனடியாகவே மீண்டும் கொழும்பு திரும்பி, பிரதமர் ரணிலுடன் கலந்துரையாடுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (200)

## இடைக்கால...

கத்தை மக்கள் வலியுறுத்த வேண்டும் என்று, மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் கேட்டுள்ளார்:

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.99 | 97.39 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 158.52 | 159.97 |
| 1 யூரோ | 114.16 | 115.51 |
| 1 சுவிஸ் பிராங் | 74.63 | 75.95 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 63.43 | 64.59 |
| 1 ஜப்பானிய யென் | 00.82 | 00.83 |
| 1 சவூதி றியால் | 25.43 | 25.43 |


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.05.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.